விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 03 சனிக்கிழமை (20.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஜனாதிபதி அடுத்த மாதம் அமெரிக்கா பயணம்!

### அழைப்பாணை கிடைக்கலாமென அச்சம்

(கொழும்பு)

**நியூயோர்க்கில் அடுத்த மாதம் கூடும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நியூயோர்க் பயணமாகவுள்ளார். அங்கிருக்கும் நேரத்தில் அமெரிக்க நீதிமன்றத்தின் அழைப்பாணை நேரடியாக கையளிக்கப்படலாம் என நியூயோர்க் தகவல்கள் தெரிவித்தன.**



இது தொடர்பாக வெளியான செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஜுன் மாதம் அமெரிக்க நீதிமன்றம் மூன்று சிவில் வழக்குகள் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பாணை அனுப்பியிருந்தது. ஹேக் உடன்படிக்கையின் அடிப்படையில் சட்டத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் படுகொலைகள் குறித்து இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள, சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புச் சட்டப்படி இப் படுகொலைகளுக்காக பொருளாதார ரீதியான நட்ட ஈடும் ஜனாதிபதியிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.கில் குண்டு வெடிப்பு 43 பேர் பலியாகினர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பள்ளிவாசல் ஒன்றில் நேற்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் ஒன்றில் குறைந்தது 43 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வடமேற்குப் பிராந்தியத்தில் ஜம்ருட் நகருக்கு அருகிலுள்ள குந்தி என்னும் கிராமத்தின் பள்ளிவாசலில் நேற்று வெள்ளிக்கிழமை (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஊடகங்களை சாடும் கோத்தபாய

(கொழும்பு)

இந்திய ஊடகங்களான ஹிந்து மற்றும் ஹெட்லைன்ஸ்ருடே ஆகியவற்றை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடுமையாகச் சாடியுள்ளார்.

கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் சகோதரர் என்ற தலைப்பில் கடந்த 16 ஆம் நாள் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக ஹிந்து நாளேடு ஆசிரியர் (20ஆம் பக்கம் பார்க்க)

## 'கிறீஸ் மனிதன்' அகப்பட்டான்!

(மட்டக்களப்பு)

கிறீஸ் மனிதன் எனக் கூறப்படும் மர்ம மனிதன் ஒருவரை பொதுமக்கள் பிடித்து நையப்புடைத்துள்ளனர். பிடிபட்ட அவர் தான் யார் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். இது குறித்து மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவித்ததாவது,

அரசாங்கமே தங்களை இங்கு அனுப்பியதாகவும் தான் இலங்கைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவன் என்றும் மட்டக்களப்பு மாவடி வேம்பில் மக்களிடம் பிடிபட்ட மர்ம நபர் ஒருவர் பொதுமக்களின் சித்திரவதை தாங்கமுடியாமல் உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திவரும் மர்ம மனிதர்கள் இலங்கை அரசாங்கத்தின்பாதுகாப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மட்டக்களப்பு மாவடிவேம்பில் பிடிபட்ட மர்ம மனிதன் ஒருவன் பொதுமக்களின் சித்திரவதை தாங்கமுடியாமல் இந்த உண்மையைக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை 10 ஆம் திகதி காலை மட்டக்களப்பு மாவடி வேம்புப் பொதுமக்களால் சுற்றி வளைக்கப்பட்டு பிடிக்கப்பட்ட மர்ம நபர் அல்லது கிறீஸ் மனிதன் என்று அழைக்கப்படும் நபரை பொதுமக்கள் கட்டிவைத்து சித்திரவதை செய்த போது,

நான் இலங்கை அரச படைப் பிரிவைச் சேர்ந்தவன். என்னை அடிக்கவேண்டாம் என கையெடுத்துக் கும்பிட்டு ஒரு அடையாள அட்டை ஒன்றைக் காட்டியதாகத் தெரிய வந்திருக்கின்றது.

இதன் பின்னர் சற்று நேரத்தில் சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் குறித்த மர்ம மனிதனை தாங்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பதாகக் கூறி கூட்டிச் சென்றதாகவும், ஆனால் இதுவரை அந்த மனிதன் பற்றியோ, அந்தச் சம்பவம் பற்றியோ இலங்கைப் பொலிஸார் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கின்றனர் இப் பிரதேச மக்கள். (எ-1)

## இலங்கை- அமெரிக்கா இணைந்து விமானப்படை கூட்டுப் பயிற்சி!

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் விமானப்படை கூட்டுப் பயிற்சி ஒன்றில் அமெரிக்க விமானப்படையுடன் இணைந்து தாம் பங்குபற்றவுள்ளதாக இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது. அமெரிக்க விமானப்படை விமானங்கள் இலங்கை வான் பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றம் சுமத்தப் பட்டு இரு வாரங்களுக்குள் இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டுப் பயிற்சியானது அமெரிக்க விமானப்படையின் பசுபிக் கட்டளைப் பிரிவின் சிந்தனையில் உதித்ததாகும் என இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்கிரம தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா தளர்வடையக் கூடாது

### அந் நாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டு

(சென்னை)

இலங்கையில் நிலவும் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதில் இந்தியா தன்னை ஈடுபடுத்தி வருகிறது. இந் நிலையில், இந்தியாவானது அரசியல் தீர்வு தொடர்பான தனது முயற்சியில் தளர்வுறாது செயற்பட வேண்டும்.

இவ்வாறு இந்தியாவைத் தளமாகக் கொண்ட டெக்கான் கேரல்ட் ஆங்கில நாளேட்டில் எழுதப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது மேலும் நெருக்கமடைந்துள்ளது.

இலங்கையில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளும் ஒரு நாடாக சீனா உள்ளதுடன் இங்கு மேற்கொள்ளப்படும் பாரிய அளவிலான திட்டங்களுக்கான நிதியை சீனா வழங்கியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கட்சி மூலமாகவே தலைமைத்துவத்தைப் பெற முடியும்

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் முழுமையான ஆதரவை பெற்ற அரசியல் கட்சி ஒன்றால் மாத்திரமே தமிழ் மக்களுக்கான தலைமைத்துவத்தைக் கொடுக்க முடியும். அவ்வாறான தலைமைத்துவம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொடுக்கும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் உறுதியான தலைமைத்துவம் ஒன்றைக் கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கிறதா? என்ற கேள்வி எழுகின்றது.

ஒரு வடிவமைப்பற்ற, யாப்பற்ற ஒருகூட்டாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் இருக்கிறது எனக் குற்றம் சாட்டுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் வருடாந்த மாநாடு நேற்றும், நேற்று முன்தினமும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## தாதியர் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதி உத்தியோகத்தர்கள் இன்று அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

தாதிய உத்தியோகஸ்தர் ஒருவருக்கும் வைத்தியர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பில் தகுந்த விசாரணை மேற்கொள்ளவேண்டுமெனக் கோரியே இந்த அடையாள பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8 மணி தொடக்கம் காலை 10 மணி வரை இப் பணிப் பகிஷ்கரிப்பு நடைபெறவுள் (20ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மண்ணில்
ஓராம் ஆண்டு
வெற்றியுடன்
வீறு நடைபோடும்
நவீன் செரமிக்



Metro Engineering
(Pvt) LTD
No.212, Palaly Rd, Jaffna. 021 222 0044 / 021 222 0033
No.05, Stanly Rd, Jaffna. 021 222 4777 / 021 222 4888

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய
அதி கம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள
ஸ்ரீ ஷண்முக இராஜகோபுரம்
ஸ்ரீ ஷண்முகப்பெருமான் ஸ்வர்ண வாசல் தரிசனம்
நவகலசாபிஷேகம்
21.08.2011 ஞாயிற்றுக்கிழமை
கார்த்திகை உற்சவதினம்- காலை 6.00 முதல்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மர்ம மனிதன் அச்சுறுத்தல் தாதிய மாணவர் வெளியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாதியர் பயிற்சி கல்லூரியைச் சேர்ந்த 80 மாணவர்களும் குறித்த விடுதியை விட்டு வெளியேறி தங்களது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குள் மர்ம மனிதன் புகுந்துள்ளான் என்ற செய்தி பரவியது. இதனையடுத்து குறித்த மர்ம மனி தனைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இவ்வாறாக மர்ம மனிதன் தொடர்பான அச்சுறுத்தல் காரணமாக குறித்த விடுதியில் தங்கியிருந்த 80 மாணவர்களும் தங்களது சொந்த இடங்களுக்குச்செல்வதற்கு விடுதியை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர். (ச-5)

# பெண் தொழிலாளர்களின் முகங்களில் திரவம் விசிறிய இனந்தெரியாதோர்

வட்டகொடை, மடக்கும்புர டொப் டிவிசன் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் இருவரின் முகத்தில் இனந்தெரியாத நபர்கள் ஸ்பிரே இயந்திரத்தினால் ஒரு வகையான திரவத்தினை விசிறியதால் பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களும் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மடக்கும்புர, டொப் டிவிசன் தோட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் இருவரின் முகத்தில் தேயிலைச் செடிகளுக்கிடையில் திடீரென தோன்றிய மர்ம நபர்கள் ஸ்பிரே இயந்திரம் மூலம் ஒரு வகையான திரவத்தினை விசிறிவிட்டு மறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்பு பாதிக்கப்பட்ட பெண்தொழிலாளர்களை சக தொழிலாளர்கள் மடக்கும்புர தோட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அதன் பின்பு மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அவர்கள் மாற்றப்பட்டனர். (ச-5)

# வைத்தியசாலைக்கு அமெரிக்கா நிதியுதவி!

(கொழும்பு)

வடக்கின் வைத்தியசாலைகளை புனரமைப்பதற்கு அமெரிக்கா நிதி உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட ஒன்பது வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் வைத்தியசாலை புனரமைப்பு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக வைத்தியசாலை புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியசாலைகளே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

முதல் கட்டத்தில் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இரண்டாம் கட்டத்தில் 1.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வைத்தியசாலை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. (ச-5)

# காஸ் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

12.5 கிலோ கிராம் எடையுள்ள ஷெல் மற்றும் லித்ரோ காஸ் விலை நேற்று முதல் 156 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-5)

# ஒருநாள் பயிற்சி கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் கத்தோலிக்க வாரஏடாகிய பாதுகாவலன் பத்திரிகையின் பத்திரிகையாளர்களாக பணியாற்றுவோருக்கான ஒருநாள் பயிற்சிக் கருத்தமர்வு இன்று காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணி வரை பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வின் சிறப்பு வளவாளராக தமிழகத்தின் திண்டிவனம் தோழன் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் அருட்பணி மரிய டெலஸ் அடிகள் கலந்து சிறப்பிப்பார். இக்கருத்தமர்வை பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணி எஸ்.ஏ.றொஷான் அடிகளார் ஒழுங்கு செய்துள்ளார். (ச)

## முக்கோண வெற்றிக்கிண்ணம்

# கார்த்திக்-லக்சுமிகாந் அதிரடியில் 3 விக்கெட்டால் வென்றது ஜொலிஸ்ரார்



கார்த்திக் றஜீவ்குமார் கலிஸ்ரன்

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டாக யாழ். நகரில் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அணிகள்பங்குகொள்ளும் 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 வது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஜொலிஸ்ரார் அணிக்கும், யாழ் சென்ரல் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் சென்றல் அணி 49.5 ஓவர்களில் 203 ஓட்டங்களை பெற்றனர்.

யாழ் சென்றல் அணியினர் 8 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்த நிலையில் றஜீவ்குமார், கலிஸ்ரன் ஜோடி 4வது விக்கெட் இணைப்பாட்டமாக 126 ஓட்டங்களைப்பெற்று முக்கோண வெற்றிக்கிண்ண தொடரில் ஒரு சாதனையை நிலை நாட்டினர்.

கலிஸ்ரன் 65 (தொடரின் 2 வது அரைச்சதம்), றஜீவ்குமார் 56 (தொடரின் மூன்றாவது அரைச்சதம்), பாலேந்திரா 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

சன்ஜித், ஜனார்த்தனன் தலா மூன்று இலக்குகளையும், மணி 2 இலக்கினையும் பகீரதன், லக்சுமிகாந் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

204 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 42.5 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களை பெற்றது. ஜொலிஸ்ரார் அணியினர் 28 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்த நிலையில் சகோதரர்களான கார்த்திக்,லக்சுமி காந் ஜோடி 4ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. கார்த்திக் 66(தொடரின் 4 வது அரைச்சதம்) லக்சுமி காந் 32, ஜனார்த்தனன் 22, நிரஞ்சன் ஆட்டமிழக்காது 24, பகீரதன் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுபாதீஸ் 4 இலக்கினையும், றஜீவ்குமார் 2 இலக்கினையும், விமலகாந் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணியினர் 4 புள்ளிகளையும் யாழ். சென்றல் அணியினர் 1.7 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

இத் தொடரின் 3 வது போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ் சென்றல் அணியினருக்கும் யாழ் பல்கலைக்கழக அணியினருக்குமிடையே நடைபெறவுள்ளது. (ச)

# பௌசர்-மோ. சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

(மல்லாகம்)

மோட்டார் சைக்கிள்-பௌசர் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் மல்லாகம் மதவடியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மல்லாகம் தேவாலய வீதியைச் சேர்ந்த சின்னராசா சிவராசா (வயது 36) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவத்தினத்தன்று குறித்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த சிவராசா எதிரில்வந்த பௌசர் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தார்.

குறித்த வீதியில் புனரமைப்பு செய்யப்பட்டுவரும் பாலத்தின் மீது பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பாலம் புனரமைப்பு செய்யப்படுவதற்கான எந்தவித சமிஞ்சைகளும் அதில் வைக்கப்படவில்லை எனவும் இரவு வேளைகளில் குறித்த பாவத்தில் மின்விளக்குகள் கூட பொருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறித்த விபத்துடன் தொடர்புடைய பௌசர் வாகனத்தின் சாரதியை மல்லாகம் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச-6)

# நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற மாற்று ஒழுங்கு

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்டநெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனினும் க.பொ.த. உயர்தரப்பரீட்சை கடமைகள் காரணமாக குறித்த திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் உள்ள ஆரம்ப, இடைநிலை, ஆங்கிலம் மற்றும் விசேடகல்வித்துறை ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் கல்வி அதி காரிகள் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் தகுந்த ஆதாரங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியும்என எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ச-5)


## வாடகைக்கு

- கட்டிட ஒப்பந்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
- நிர்மாண வேலைக்கு தேவையான கொங்கிறீட் மிக்சர் மெஷின், சட்டறிங் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு கொள்ளவும்
0773101462,0779492269
228, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(5952)

## கணக்காளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கணக்காளர் தேவை. தகைமையுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
தொடர்பு: PC Systems
ஆலடிச் சந்தி, யாழ்.வீதி, மானிப்பாய்.
Email: aravino3@yahoo.com
(5948)

## வீடு விற்பனைக்கு

சுதுமலைதெற்கில்நல்லசூழலில் உடன்குடிபுகக்கூடியவீடொன்றும் சற்றுகுறையாக உள்ள வீடொன்றும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : K.சீவறட்ணம்
C/O K.குணறட்ணம்
57/16 றிஜிஸ்ரார்
சம்பந்தர் ஒழுங்கை
சுதுமலை தெற்கு
(5924)

# இன்று ஒரு தகவல்

## அந்த இரண்டு காசுகள்...

ஜெருசலேம் தேவாலத்தின் பலிபீடத்தின் முன்னால் ஒரு காணிக்கைப் பெட்டி இருந்தது.

மேற்படி ஆலயத்திற்கு வருகிறவர்கள் பிரார்த்தனை செய்துவிட்டு, அந்தப் பெட்டியிலே காணிக்கை போடுவது வழமை.

ஒவ்வொருவரும் தமது தகுதி, வசதிக்கேற்றது போல் காணிக்கைப் பெட்டியிலே காசு போடுவது மிகவும் பெருமையான ஒரு செயலாக அமைந்தது.

ஒரு நாள் இயேசு தன்னுடைய சீடர்களோடு ஆலயத்திற்கு வந்து செப வழியாட்டில் ஈடுபட்டார்.

வழிபாடு முடிந்ததும் இயேசு சீடர்களுடன் அமர்ந்திருந்து காணிக்கை பெட்டியிலே காணிக்கை இடுபவர்களை கவனித்துக் கொண்டிருந்தார்.

அதிகளவானோர் வரிசையாக நின்று தங்களால் முடிந்தளவு காணிக்கையை அப்பெட்டியினுள் போட்டார்கள்.

வசதியானவர்கள் நிறைய பேர்... வந்து... அதற்கு மத்தியிலும் வயதான ஒரு அம்மா... வந்து காணிக்கை போட்டுவிட்டுச் சென்றார்.

இயேசு தன் சீடர்கள் பக்கம் திரும்பி, "இப்போது... இந்தக் காணிக்கைப் பெட்டியிலே அதிகமானவர்கள் வந்து காசு போட்டுவிட்டுச் சென்றதை நீங்கள் அவதானித்தீர்கள்...

இன்றைக்கு இந்தக் காணிக்கைப் பெட்டியிலே அதிகளவான காசு போட்டது யார்?" என்று கேட்டார்.

"முதலில் வந்த பெரியார் தான் அதிகமாக காணிக்கைப் பெட்டியினுள் காசைப் போட்டார்" என்று ஒருவர் கூறினார்.

வேறொருவர் "மூன்றாவதாக, வந்தவர்தான் அதிகமாகப் போட்டதை நான் அவதானித்தேன்" என்று கூறினார்.

இப்படி... ஒவ்வொருவராக ஆளுக்கொரு விதமாகக் கூறினார்கள்.

கடைசியாக இயேசு, "இன்றைக்கு அந்தப் பெட்டியிலே அதிகமாக காசு போட்டவர் அந்த வயதான அம்மா!" என்று கூறினார்.

சீடர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அந்த அம்மா ஏழை... எப்படி அதிகமான காணிக்கையைச் செலுத்த முடியும்? என்று சந்தேகம் கொண்டனர்.

இயேசு இது தொடர்பாக விளக்கம் கூற ஆரம்பித்தார்.

அந்த அம்மா காசுப் பையைத் திறந்து அப்படியே கொட்டினார். அதில் இரண்டே இரண்டு காசுகள்தான் இருந்தன. அந்த இரண்டு காசையும் அப்படியே காணிக்கைப் பெட்டியினுள் போட்டார்.மற்றவர்கள் எல்லோரும் தங்களிடமிருந்த செல்வத்தின் ஒரு சிறு பகுதியை மட்டுமே காணிக்கையாகப் போட்டார்கள்.

அந்த அம்மா தன்னுடைய பிழைப்புக்காக வைத்திருந்த அனைத்தையும் இழக்கத் தயாராகியுள்ளார். அவ்வளவு தாராள மனம். அதனால் அந்த அம்மா செலுத்திய காணிக்கைதான் அளவிலே அதிகம்!" என்றார்.

அப்படியென்றால்... "விலை மதிப்பில்லாத முத்துப் புதையல் ஒருவனுக்கு கிடைக்கப்போகிறது என்பதை வைத்துக் கொள்வோம். அதன் மதிப்பை உணர்ந்தவன், அதை அடைவதற்கு தன்னிடமுள்ள எதையும் இழப்பதற்கு தயாராக இருப்பான். அதுமாதிரித்தான் இதுவும்!" அப்படியென்றால்...

"உலக மதிப்பீடுகளைத் துரும்பாக– தூசியாக மதித்து அவற்றை உதறி விடுகிறவன் இறையருள் எனும் இணையில்லாத செல்வத்தையும் பெறுகிறான்!" அதுதான் இதிலே உள்ள கருத்தாகும்.

இறைவனுக்காக இழப்பது என்பது, துன்பப்படுகிறவர்களுக்காக , ஏழைகளுக்காக, ஏதிலியர்களுக்காக கொடுப்பதுதான் அர்த்தமாகும்.

"உங்கள் அயலானுக்கு நீங்கள் என்ன உதவி செய்தாலும் அதை எனக்கே செய்கிறீர்கள்"

அடுத்தவனுக்கு உதவி செய்கிற குணம் இன்றைய காலத்தில் மிகவும் அரிதாகவே உள்ளது! என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# துணுக்காய் பிரதேசத்தில் புதிய பொதுக்கிணறுகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் திறந்த கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டு மக்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

மல்லாவி மங்கை நகர் குடியிருப்பு கிராமத்தில் தலா 3 இலட்சத்து 99 ஆயிரம் ரூபா செலவில் 2 கிணறுகளும் ஆலங்குளம் கிராம சேவகர் பிரிவில் 3 இலட்சத்து 99 ஆயிரம் ரூபா செலவில் ஒரு கிணறும் அமைக்கப்பட்டுள்ளன.

புகழேந்திநகர் கிராம அலுவலர் பிரிவிலும் வளநகர் கிராம சேவகர் பிரிவிலும் உயிலங்குளம் கிராம அலுவலர் பிரிவிலும் தலா ஒவ்வொரு குழாய்க்கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

அத்தோடு பாரதி நகர் கிராம சேவகர் பிரிவிலும் தேறாங்கண்டல் கிராம சேவகர் பிரிவிலும் தலா ஒரு குழாய் கிணறு வீதம் அமைக்கப் படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-15)

# இளைஞன் காயம்

(கரவெட்டி)

கட்டடப் பணியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம் பெற்றுள்ளது.

கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை 20 அடி உயரத்திலிருந்து தவறி வீழ்ந்தே அவர் படுகாயமடைந்தார். கோப்பாய் பழைய வீதியைச் சேர்ந்த செல்வராசா கோணேஸ் (வயது-20) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ச-8,9,24)

# சிறுபோக நெல் உற்பத்தியில் சாதனைக்கு முயல்கிறது இலங்கை

இந்த வருட சிறுபோக நெல் உற்பத்தி இலங்கை வரலாற்றிலேயே ஒரு பெரும் சாதனையை ஏற்படுத்தும் என விவசாய பொருளியலாளரான கலாநிதி எல்.பி.ரூபசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை முழுவதும் சுமார் 501017 ஹெக்ரயர் நிலப்பரப்பில் 2011 சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அறுவடையும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 1916138 மெற்றிக் தொன் நெல் அறுவடையினை எதிர்பார்க்க முடியும்.தற்போது இலங்கையின் நெல் சந்தைப்படுத்தல் சபையானது சிறுபோக நெல் அறுவடையினை கொள்வனவு செய்து வருகின்றது.

எனினும் கட்டுப்பாட்டு விலையினை வெற்றிகரமாக அரசினால் மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் சந்தையில் நிலவும் கேள்வி-நிரம்பல் அடிப்படையில் உருவாக்கப்படும் விலைகளில் விவசாயிகள் தமது நெல்லினை விற்க வேண்டியுள்ளது. இலங்கையில் அரிசி மாவிற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அரிசி, மா உற்பத்தியாளர்கள் தற்போது சந்தையில் காணப்படும் நெல்லினை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி நன்மையடைய வாய்ப்பு உள்ளதாக விவசாய பொருளியலாளரான கலாநிதி எல்.பி.ரூபசேன மேலும் தெரிவித்துள்ளார். (4-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 20 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 90 | 90 |
| தக்காளி | 30 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 45 | 40 |
| கோவா | 30 | 60 |
| கரட் | 50 | 80 |
| பூசணி | 25 | 30 |
| புடோல் | 30 | 20 |
| வாழைக்காய் | 40 | 20 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 85 | 40 |
| பாகற்காய் | 60 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 120 |
| பயற்றங்காய் | 80 | 90 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 40 |
| முருங்கைக்காய் | 100 | 120 |
| போஞ்சி | -- | 110 |
| கத்தரிதம்புள்ள | 35 | 15 |
| கீரை – 1 பிடி | 8 | 20 |
| தேசிக்காய் | 70 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

# இராசி பலன்

*20.08.2011*
*(ஆவணி 03 , சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*சஷ்டி முற்பகல் 10.34 மணிவரை*
*அச்சுவினி காலை 8.21 மணிவரை*
*இராகுகாலம் 9.05-10.35 1மணிவரை*
*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*

**மேடம்** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகும்,நல்வர்களை சந்தித்து நலம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** பிரியமான சிலருக்காக ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை உருவாகலாம்,குல தெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்,வெளியூர் தொடபுகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** சுப செய்திகள் வந்துசேரும் நாள்,விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்,பண வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், உறவினர் வருகையுண்டு.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்,கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்,பயணத்தால் பணவரவு கிடைக்கும், தலைமைப் பொறுப்புக்கள் தேடிவரலாம்.

**சிங்கம்** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், எதிர்ப்புகள் குறைந்து வியாபார விருத்தி ஏற்படும்.

**கன்னி** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையலாம், கௌரவக் குறைவான நாள், வேலைச்சுமை கூடும்,பிரயாணத்தின் போது விழிப்புணர்ச்சி தேவை.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள்,தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்** எதிரிகள் விலகுவர், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், ஆரோக்கியம் சீராகும், பணத் தேவைகள் ஓரளவு நிறைவேறும்,போசன சுகமுண்டு.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள்,மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்,பூர்வபுண்ணிய கருமங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** வரவேண்டிய பணவரவுகள் வந்துசேரும்,விருந்து,விழாக்களில் கலந்துகொள்ளும் சூழ்நிலை அமையலாம்,பெரியவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**கும்பம்** பொன்னான நாள்,பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்,சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மீனம்** புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்,எதிர்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

வளவன்

## நீதிமன்றத்தால் அபராதம்

அரியாலைப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தபப்பட்டார்.

வழக்கை விசாரித்து யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 15 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத் தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரு நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ் .நீதிவான் நிதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகள் எனக் கண்டு ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சிறைத்தண்டனையும் வழங்கியதோடு மற்றவருக்கு 5ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

★ ★ ★ ★

சாரதி அனுமதிப்பத்திரம், இறைவரிப்பத்திரம் , காப்புறுதிப்பத்திரம் ஆகியவை இன்றி மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ் வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு சாரதி அனும திப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமைக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் இறைவரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமைக்கு 500 ரூபா அபராதமும் காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தியமைக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் ஒருமாத சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

★ ★ ★ ★

நீதிமன்றத்தை அவமதித்த பெண்ணொருவர் ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சிறைத் தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு நேற்றைய தினம் சண்டை வழக்கொன்றிற்காக வந்திருந்த குறித்த பெண் நீதிமன்ற வழக்கு முடிவடைந்த போது எதிர்த் தரப்புடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டவேளை நீதிமன்ற பொலிஸாரால் மேற்படி பெண் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா குறித்த பெண்ணுக்கு மேற்படி அபராதத்தையும் சிறைத்தண்டனையையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

★ ★ ★ ★

கவலையீனமாகவும் அதிவேகமாகவும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் இருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந் தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கவனயீனமாக வாகனம் செலுத்திய நபருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் அதிவேகமாக வாகனம் செலுத்தியவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் இருவருக்கும் தலா ஒருமாத சிறைத்தண்டனையும் வழங்கித்தீர்ப்பளித்தார். (4-3)

## இலங்கையின் சுற்றுலாத்துறை 36 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டின் சுற்றுலாத்துறை 36 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்தளாக பொரு ளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ் மன் ஜாப்பா அபேவர்த்தன தெரிவிக்கின் றார்.

அறுகம்பை பகுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இம்மாதம் இறுதியில் அறுகம்பையில் ஆரம்பமாகவுள்ள கடலலை சறுக்கல் சர்வ தேச போட்டிக்கான ஏற்பாடுகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் அறுகம்மை பகுதி சுற்றுலா பயணிகளை அதிகம் ஈர்த்தெடுப்பதாகவும் உலகில் நீர்ச்சறுக்கல் போட்டிகள் நடத்தப் படும் 10 இடங்களில் அறுகம்பைக்கு முக் கிய இடம் கிடைப்பதாக குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை இலங்கை மிகவும் சிறந்த மட்டத்தை அடை ந்து வருவதாக சுட்டிக்காட்டிய பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் எதிர்பார்த்தைவிட அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட் டுக்காக வருகைதந்துள்ளதாக தெரிவித் தார். (4-2)

## நல்லூர் கும்பாபிஷேக நேரடி ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடை பெறும் சன்முகர் நவதள இராஜகோபுர கும் பாபிஷேக விழாவும் அன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் கார்த்திகை உற்சவப் பெருவிழாவும் இலங்கை வானொலி யாழ் எவ்.எம் அலை வரிசையூடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது.

இவ் அஞ்சல் நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (4-2)

## கஞ்சா வைத்திருந்த நபர் தொடர்ந்தும் விளக்கமறியல்

(கரவெட்டி)

கிளிநொச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளி நெச்சி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பிரதேசத்தில் 10 அரைக் கிலோ கஞடசா பொதியுடன் கிளி நொச்சி பொலிஸாரால்கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபரை கிளி நொச்சி நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிபதி பெரு மாள் சிவகுமார் குறித்த நபரை தொடர்ந்து 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-24)


## 19ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வு


வரவேற்பு நடனம்



வரவேற்பு உரை



தலைமை உரை



ஆசி உரை


யாழ் விருது வழங்கல்


முதற்பிரதி வெளியிட்டுவைத்தல்


விசேட பிரதி வழங்கல்


ஆய்வுரை



நிகழ்வில் கலந்துகொண்டோர்



வடமாகாண சபையின் திட்டமிடல் அமைச்சினால் வடமாகாணத் திணைக்களத் தலைவர்களுக்கான திட்டமிடல் குழுக் கூட்டம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் வடமாகாணசபை பிரதம செயலாளர் ஆர். சிவசுவாமி, வடமாகாண ஆளுநரின் பதில் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: என்.குமார்)

# நஷனல் பீவீசி குழாய் பொருத்துக்கான விநியோகத்தர் கிளிநொச்சியில் நியமனம்



நஷனல் பீவீசி குழாய் மற்றும் பொருத்துக்களின் உற்பத்தியாளர்களான சென்றல் இன்டஸ்ரீஸ் பீஎல்சி நிறுவனம் தனது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான விநியோகத்தராக சன்டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தை நியமித்துள்ளது.

சன்டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தின் புதிய விநியோக நிலையம் 2 ஆம் பாம், டிப்போ வீதி, கனகபுரம், கிளிநொச்சியில் சென்றல் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளரினால் திறந்து வைக்கப்பட்டது.

சன்டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனம் கடந்த ஒருவருட காலமாக சென்றல் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தின் மற்றும் மன்னார் மாவட்ட விநியோகத்தராக மிகத்திறம்பட செயற்பட்டு வாடிக்கையாளர் மத்தியில் சிறந்த நன்மதிப்பையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி , முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியேற்ற செயற்பாடுகளுடன் இந்த மாவட்டங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் சிறப்பான்தும் துரிதமானதுமான சேவையை வழங்கவென சென்றல் இன்டஸ்ரீஸ் நிறுவனம் கிளிநொச்சி நகரிலும் புதிய விநி யோக நிலையத்தை நியமித்துள்ளது.

இலங்கையில் முதன்முதலாக SLSI 49 மற்றும் SLS659 இலங்கை தரச்சான்றிதழ்களைப் பெற்ற முதற்தர பீவீசி உற்பத்திகளான நஷனல் பீவீசி குழாய் மற்றும் பொருத்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனமே சென்றல் இன்டஸ்ரீஸ் பீ.எல்.சீ நிறுவனமாகும்.

இதற்கு மேலதிகமாக தொலைத்தொடர்பு துறைக்கான நிலக்கீழ் பீவீசி குழாய்கள், மழைநீர் பீலிகள் பொருத்துகள், மின் இணைப்பு கொண்டியூட்கள், நீர்க்குழாய்கள், நீர்த்தாங்கிகள், கழிவு நீர்த்தாங்கிகள், துருப்பிடிக்காத நீர்த்தாங்கிகள் (SS), பீவீசி ஒட்டும் பசைகள், கிறிப்டன் மின் ஆழிகள் மற்றும் உபகரணங்களை தனது சொந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதுடன் நெற்லோன் நுண் உயிர்க் காப்பு வலைகள், அக்ரோஷேடிங், ஸ்ரார் வர்க்க கழிவுநீர் பொருத்துகள் போன்றனவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து விநியோகம் செய்கின்றது.

எம்மால் விநியோகம் செய்யப்படுகின்ற எமது உற்பத்திகளும் இறக்குமதி செய்யப்படும் உற்பத்திகளும் எமது தொழிற்சாலையில் மிக உயர்ந்த தரப்பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாகவே அநேக நிர்மாணத்துறை நிறுவனங்கள் இலங்கையில் அவற்றின் பாரிய நிர்மாணப் பணிகளுக்கு எமது உற்பத்திகளை தெரிவு செய்கின்றன.

சென்றல் இன்டஸ்ரீஸ் பீஎல்சி நிறுவனம் கூட்டுறவு வலையமைப்பு,நீர் வழங்கல் சபை, மின் உபகரணப் பிரிவு ஆகிய பிரிவுகள் ஊடாக மிகவும் திடமான நிர்மாண நிறுவன வலையமைப்பைக் கொண்டு செயற்படுவதுடன் வாடிக்கையாளர் வலையமைப்பானது நாடு முழுவதும் 30 இற்கும் மேற்பட்ட விநியோத்தர்களைக் கொண்டு மீள் விற்பனை சந்தையை மிகவும் திறம்பட கவனித்து வருகின்றது.

நிர்மாணத்துறையில் 25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்துள்ள சென்றல் இன்டஸ்ரீஸ் பீஎல்சி நிறுவனமானது இன்னும் பல வருடங்கள் தனது சிறப்பான சேவையை வழங்கக் காத்திருக்கின்றது. விசேடமாக வடமாகாண அபிவிருத்தி செயற்பாட்டில் மிகத்திடமாக இணைந்து பங்கு கொள்ள எதிர்பார்க்கின்றது.(ச)

# மல்லாவியில் புதிய தபாலகம் திறப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லாவி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட உபதபாலகத்தின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தபாலதிபர் திருமதி மருதலிங்கம் சுகந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

யுத்தத்தின் போது முற்றாக அழிக்கப்பட்ட இத் தபாலகம் மீள்குடியேற்றத்தின் பின் வடக்கின் வசந்தம் நிதித் திட்டத்தின் மூலம் 47இலட்சத்து 23 ஆயிரத்து 165 ரூபா செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன், முல்லைத்தீவு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ரி.புஸ்பகுமாரர் மற்றும் தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(4-15)

# பெண்களை விரட்டிய இரு சந்தேகநபர்கள் கைதாகினர்

## செட்டிக்குளத்தில் சம்பவம்

செட்டிக்குளம் பிரிவிற்குட்பட்ட சூடு வெந்த பிலவு பழைய கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு பெண்களை விரட்டியதாக கூறப்படும் சந்தேக நபர்கள் இருவரை பிரதேசவாசிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இரவு நேர நோன்பு தொழுகைக்காக முஸ்லிம் பெண்கள் பள்ளிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது குறித்த நபர்கள் மேற்படி பெண்களை விரட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண்கள் கூச்சலிட்டபோது அவ்விடத்தில் திரண்ட கிராமமக்கள் குறித்த மனிதர்களை பிடித்து மரத்தில் கட்டிவைத்து பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டதாக சூடுவெந்தபிளவு நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.


சந்தேக நபர்களுடன் வந்த மேலும் இருவர் தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இரவு நேரத்தில் குளத்தில் மீன்பிடிக்க வந்தவர்கள் என்றும் விசாரணையின்போது தெரியவந்ததாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-2)



# யுத்தக் குற்றங்களைச் சுமத்தி வருவோர் எவ்வற்றிலும் திருப்தியடைவதில்லை

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

சில தரப்பினர் எப்போதும் திருப்தி அடைய மாட்டார்கள் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வரும் தரப்பினர் எவ்வாறான விளக்கம் அளித்தாலும் திருப்தி அடைவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் தொடர்பான தகவல்களை வெளியிடும் நோக்கில் இணையத்தளமொன்றை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட யுத்த குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக அரசாங்கம் முடிந்தளவு பதிலளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் சில சக்திகள் ஒன்றன் பின் ஒன்றாக குற்றச்சாட்டுகளை அடுக்கிச் செல்வதாக அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் அளிக்கப்படும் பதில்களின் உண்மைத் தன்மை குறித்து இந்த சக்திகள் அறிந்து வைத்துள்ள போதிலும் திருப்தியற்ற வகையில் கருத்துக்களை தொடர்ந்தும் வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சக்திகள் மறைமுக நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நீடிக்கும் வரையில் தங்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என அறிந்து கொண்ட சிலசக்திகள் பல்வேறு வழிகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

95 வீதமான இடம்பெயர் மக்கள் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் சிறுவர் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயிரத்திற்கும் குறைந்தளவு மக்களே இன்னமும் மீள் குடியேற்றபட உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் ஜனநாயக ரீதியில் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.

சில இலங்கையர்கள் நாட்டுக்கு எதிரான சக்திகளுக்கு தகவல்களை வழங்கி வருவது துரதிர்ஷ்டவசமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை முன்வைப்பதற்கு இலங்கையர்களே தகவல்களை வழங்குவது கவலைக்குரியது என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# போதைப் பொருள் கடத்த முயன்றவர் கைது

இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்படவிருந்த திருமண அழைப்பிதழ்களில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

14 திருமண அழைப்பிதழ்கள் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட விருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

இதன் காரணமாக திருமண அழைப்பிதழ்களின் ஊடாக அமெரிக்காவிற்கு போதைப்பொருள் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொலிஸாரினால் முறியடிக்கப் பட்டுள்ளது.

குறித்த அழைப்பிதழ்களில் பதினொரு இலட்ச ரூபா பெறுமதியான கொக்கேய்ன் எனப்படும் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தரமுல்ல தலவத்துகொட பொலிஸாரினால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(4-2)

# ஐ.தே.க.வின் தலைவராக தொடர்ந்தும் ரணில் இருப்பார் என்பதில் உண்மையில்லை

## தலதா அத்துகோரள தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு ரணில் விக்கிரமசிங்கவை செயற்குழு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கெண்டதாக வெளியான தகவல்களிலும் உண்மையில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்கவிற்கு எதிராக ஒழுங்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டுமென செயற்குழுவில் யோசனை முன்வைக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கட்சியின் நான்கு உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுங்காற்றுநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை என கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்சியின் நான்கு உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் தலைவர் ரணில் விக்கீரமசிங்க சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

(4-2)

# வெளிநாட்டின் உதவியுடன் மட்டும் புலிகளின் வலையமைப்பைத் தோற்கடித்து விடமுடியும்

## ரொஹான் குணரட்ண நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை இலங்கையினால் மட்டும் இல்லாதொழிக்க முடியாது என பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

சோஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை முறியடிக்க முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புலம்பெயர் இலங்கையர் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் தொடர்பில் விசேட பிரிவுகள் நிறுவப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர் இலங்கைச் சமூகத்திற்கும் உள்நாட்டு சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் இலங்கை தொடர்பில் கூடுதலான விளக்கம் அளிக்கப்பட வேண்டும் எனவும் புலிகளின் சர்வதேச பிரசாரங்களுக்கு உரிய பதில்கள் அளிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஓர் பிரசார வலையமைப்பாக மாற்றமடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முனைப்பு காட்ட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ருத்தகுமாரண் போன்றவர்கள் நாட்டுக்கு எதிராக போலியான பிரசாரங்களை செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1995 ஆம் ஆண்டில்உலெபனான் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் கடந்த 1997 ஆம் ஆண்டளவில் வடகொரியாவிடமிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவைதடுத்து நிறுத்த அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் காத்திரமான உதவிகளை வழங்கியதாகக் குறிப் பிட்டுள்ளனர். (4-2)

8 ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வி மங்கையர்க்கரசி பொன்னம்பலம்

(மங்கை)

மலர்வு: குப்பிளானில்
23.08.1978

உதிர்வு: லண்டனில்
20.08.2003



அன்பின் திருவுருவாய்
பாசத்தை பொழிந்த
இனிய இளைய அழகு மகளே!

மங்கையே!

ஆண்டுகள் எட்டு ஆனாலும்
ஆறுமோ எம் துயர்தான்
உன் அகண்ட நினைவுகளை
மனதில் சுமந்தபடி ....

பொன்-மணிவாசா
குப்பிளான் தெற்கு

உன் நினைவில் வாழும்....
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்காமார்.


தொ.பே:-0779779407

# யுத்தம் முடிவடைந்தது சவால்கள் முடியவில்லை

## பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிராக யுத்தம் முடிவடைந்தாலும் நாட்டுக்கு எதிரான சவால்கள் முடிய வில்லை எனவும் எதிர்காலத்தில் அதிக சவால்ளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட அமைச்சர் தாரூஸ்மன் அறிக்கை ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு தகவல்களை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட போதிலும் அதன் உறுப்பினர்கள் தமது நிகழ்ச்சி நிரலுக்கு புறம்பாக செயற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இலங்கையின் பாதுகாப்பு தரப்பினர் தமதுயிரை துச்சமாக கருதி மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் பயங்கரவாதிகள் அப்பாவி தமிழ் மக்களை கேடயமாக பயன்படுத்திய போது அவர்களை காப்பாற்றுவதற்காக இராணுவத்தினர் வழங்கிய பங்களிப்பு தொடர்பில் போதுமானளவு ஆதாரங்கள் இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(4-2)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் :- புண்ணியாமீன், மஸீதா புண்ணியாமீன்

## பகுதி – II

♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**01) பின்வரும் பாடல் வரிகளை வாசிக்க.**

நன்மை செய்து வாழ்ந்தால் – தம்பி
நாலு பேரை வாங்கலாம்!
உண்மை வழியில் நடந்தால் – தம்பி
உயர்ந்த வாழ்வை அடையலாம்!
பண்பில் குன்றாய் விளங்கினால் தம்பி
பாரும் வாழ்த்தக் காணலாம்!
அறிவை நாளும் வளர்த்தால் தம்பி
அழியாப் புகழை பெறலாம்! – தங்க சங்கர பாண்டியன்

♦ மேலுள்ள பாடல் வரிகளைப் பயன்படுத்தி 1 – 5 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பாடலில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் இரண்டினை எழுதுக.
   ........................................................................
   ........................................................................

2. நாலுபேரை வாங்கலாம் எனும் சொற்றொடரின் உட்கருத்து யாது?
   ........................................................................

3. வாய்மை எனும் சொல்லுக்குரிய ஒத்தகருத்தைத் தெரிவுசெய்து எழுதுக.
   ....................................

4. குழி என்பதற்குரிய எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.
   ....................................

5. புகழ் பெறுவதற்கு யாது செய்ய வேண்டும்?
   ........................................................................

**02) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

1. கையை விரித்தல் ........................................................
2. தட்டிக் கொடுத்தல் ........................................................
3. நடைபிணம் ........................................................

**03) சொற்களின் மிகச் சரியான வடிவத்தைத் தெரிவுசெய்து அதனைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதி வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.**

1. கொழும்பு, கண்டி புகையிரதம் ........................................ தடம் புரண்டதால் பயணிகள் சிறுசிறு காயத்துக்குள்ளாகினர்.
   (தண்டவாலத்திலிருந்து, தண்டவாளத்திளிருந்து, தண்டவாளத்திலிருந்து, தன்டவாளத்திலிருந்து)

2. பாதையோரங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பல்நிற .......... ........................ ங்களை அருந்துவது சுகாதாரத்திற்குக் கேடாகும்.
   (குளிர்பாண, குலிர்பான, குளிர்பான, குலிர்பாண)

3. ஆறுமுகநாவலர் சைவ சமயத்து ....................தொண்டாற்றினார்.
   (அளப்பறிய, அளப்பரிய, அலப்பறிய, அலப்பரிய)

**04. இடைவெளிகளுக்குள் வரவேண்டிய சரியான சொற்களை எழுதுக.**

1. ..................... முக்காரமிடும் என்பது போல எருமை ................
2. புறா .................. என்பது போல ........................ அகவும்.
3. ....................... இரையும் என்பதுபோல தேனீ .......................

**05) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை எழுதுக.**

1. May I Come in ........................................................
2. Clap your Hands ........................................................

**06) பின்வரும் வாக்கியங்களின் தமிழ் வடிவத்தை எழுதுக.**

1. நான் ஒரு வெட்டுக்கிளி ........................................................
2. எனக்கு ஆறு கால்கள உள்ளன. ........................................................

**07) பின்வரும் வாக்கியங்களின் சிங்கள வடிவத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

1. உங்கள் பெயர் என்ன? ........................................................
2. அப்பா வந்தாரா? ........................................................

**08) தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை எழுதுக.**

1. அப்பி புஸ்தகாலயட்ட யமு ........................................................
2. ஓயாகே(g) வயஸ கீயத ........................................................

♦ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


09) சர்வதேச குடிநீர் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
1. ஒக்டோபர் 1ம் திகதி 2. ஒக்டோபர் 6ம் திகதி
3. மார்ச் 22ம் திகதி 4. செப்டெம்பர் 16ம் திகதி

10) இரண்டு சட்டக் காந்தங்கள் ஒன்றையொன்று அருகில்கொண்டுவரப் படும் விதம் உருவில் உள்ளது. இங்கு N என்பது வடமுனையையும் S என்பது தென்முனையையும் குறிக்கும். இச் செயற்பாட்டின் போது நிகழக்கூடியது.




1. காந்தங்கள் ஒன்றையொன்று கவரும்
2. காந்தங்கள் ஒன்றையொன்று தள்ளும்
3. காந்தங்கள் முதலில் கவர்ந்து பின்னர் தள்ளும்
4. எந்த மாற்றத்தையும் அவதானிக்க முடியாது

11) ஒரு சிறுவன் இரண்டு மின்கலங்களை ஒரு மின்குமிழுடன் இணைத்த விதங்கள் A B எனும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழ் பற்றிய சரியான கூற்று எது?



1. Aயில் குறைந்த பிரகாசத்துடனும் Bயில் கூடிய பிரகாசத்துடனும் மின்குமிழ்கள் ஒளிரும்.
2. Aயில் கூடிய பிரகாசத்துடனும் Bயில் குறைந்த பிரகாசத்துடனும் மின்குழிழ்கள் ஒளிரும்.
3. Aயிலும் Bயிலும் சம அளவான பிரகாசத்துடன் மின்குமிழ்கள் ஒளிதரும்.
4. Bயிலுள்ள மின்குழிழ் ஒளிர மாட்டாது.


12) தரம் 4 மாணவர்கள் புற்றரை ஒன்றின் ஒரு பகுதியை தடித்த பலகைத் துண்டு ஒன்றினால் மூடி வைத்து சில நாட்களின் பின் பலகையை அகற்றி அவதானித்தனர். அவர்களின் அவதானிப்பாக இருக்கக்கூடியது எது?
1. புற்றரையில் எந்த மாற்றமும் இல்லை.
2. பலகையால் மூடப்பட்ட பகுதி வெளிர் மஞ்சள் நிறமாகியிருந்தது.
3. பலகையால் மூடப்பட்ட பகுதி கருகிக் காணப்பட்டது.
4. பலகையால் மூடப்பட்ட பகுதியில் புல் மிகச் செழிப்பாக இருந்தது.

13) குறித்த காலத்தில் மட்டும் பூக்கின்ற தாவரம் எது?
1. பிறைப்பூ 2. செவ்வரத்தை 3.செவ்வலரி 4. சூரியகாந்தி


14) இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கொண்டிராத மாவட்டம் எது?
1. யாழ்ப்பாணம் 2. அம்பாந்தோட்டை
3. அம்பாறை 4. அனுராதபுரம்

15) உணர்ச்சிகள் எதுவும் காட்டப்படாத முகபாவனையுடைய உரு எது?

1. 2. 3. 4.




16.



அருகிலுள்ள உருவை ஊசித்துளைக் கமராவினால் பார்க்கும்போது தென்படும் விதம் எது?


1. 2. 3. 4.




17) விளையாடும்போது சக்தி விரயமாகும் ஒரு விளையாட்டு எது?
1. பல்லாங்குழி விளையாட்டு 2. தாயக்கட்டை விளையாட்டு
3. சதுரங்கம் 4. மேசைப் பந்து விளையாட்டு

18) பின்வருவனவற்றுள் பறக்கமுடியாத பறவை எது?

1. 2. 3. 4.



19)



உருவில் காட்டப்படுவது என்ன பூவாகும்?
1. தாமரை 2. கடுபுல்
3. அந்திமந்தாரை 4. பிறைப்பூ

20) ஒலிம்பிக் கொடியின் பினனணி என்ன நிறம் கொண்டது?
1. வெள்ளை 2. மஞ்சள் 3. கறுப்பு 4. செம்மஞ்சள்

# நல்லூர் ஆலய சூழலில்...

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 17 ஆவது நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் திருமதி பங்கயற்செல்வி முகுந்தனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். இதில் வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் திருமதி கான கோகிலம் ஜெயம், கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

* * * * *

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

இதில் இன்றைய தினம் **நமது கலாசாரம்! நமது பெருமை?** எனும் தொனிப் பொருளில் ஜாக்ரத் சைதன்யா சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * * * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலை 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 17 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் **கண்ணப்பன் கண்டபக்தி** என்ற தொனிப்பொருளில் சிவ உமாசுதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை, அளவெட்டி காமாட்சி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

* * * * *

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமயச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினந்தோறும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்றைய தினம் மானிப்பாய் கலைக்கோவில் கலாமன்றத்தினரின் நாட்டியாஞ்சலி இடம்பெறவுள்ளது.

* * * * *

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ - சிவ.வை. நித்தியானந்த சர்மா பாதுகாபட்டாபிஷேகம் பற்றி இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (4)

# இடைக்கால செலவீன அடிப்படையில் வரவு-செலவுத்திட்டம் தயாரிக்க முடிவு

## அமைச்சரவை அங்கீகாரம்

இடைக்கால செலவீன அடிப்படையில் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இது குறித்து அயமைச்சரவை திறை சேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளது என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் இடைக்கால செலவின் திட்டமாக தயாரிக்கப் படவுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான வரவு-செலவுத் திட்டத்தை இடைக்கால செலவீனத் திட்டமாக தயாரிக்க வேண்டுமென்று நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை பின்வரும் வரம்புகளுக்கு ஏற்புடைய வகையில் தயாரிப்பதற்கு திறைசேரிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொருளாதார வளர்ச்சியைக் குறைந்த பட்சம் 8 சதவீதமாக நிலைத்திருக்கச் செய்ய வேண்டும், பணவீக்கம் 6 முதல் 7 சதவீதத்திற்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டும், வரவு செலவுத்திட்டத்தின் துண்டுவிழும் தொகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போது இருக்கும் 6.8 சதவீதத்தில் இருந்த 6.2 சதவீதமாக குறைக்க வேண்டும், தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதமாக இருக்கும் மொத்த கடன் இலக்கு 75 சதவீதமாக குறைக்கப்படவேண்டும், அரசாங்கம் கடைப்பிடிக்கும் தற்போதைய பொருளாதார கொள்ளைக்கு ஏற்புடைய வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்த பட்சம் 6 சதவீத பொது முதலீடுகளை நிலைத்திருக்க வேண்டும்.

இத்தகைய கொள்கை வரம்புகளுக்கு அமையவே அடுத்தடுத்த ஆண்டுகளின் வரவு-செலவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்று அமைச்சரவை திறைசேரிக்கு பணிப்புரை பிறப்பித்துள்ளது. (4-2)

# மதவாச்சியிலிருந்து திருகோணமலைக்கு ரயில் பாதை அமைக்க நடவடிக்கை


(கொழும்பு)

மதவாச்சியிலிருந்து திருகோணமலை வரையில் புதிய புகையிரதப் பாதையொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. சுமார் 90 கிலோ மீற்றர் நீளத்தில் இப்புதிய பாதையை அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை நடத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான ஆய்வுகளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள பிரிவு மேற்கொள்ளவுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கமவின் ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது என அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 17 ஆம் திருவிழா



## வேண்டும் வரம் தருவான்

நல்லூர் கந்தனின் நல்லருள் வேண்டியே
நாளும் துதித்திடுவோம்-அவன்
வல்லமை பெற்றுமே வாழ்வில் சிறப்புடன்
வாழ்ந்து நலம் பெறுவோம்

எல்லையில் இன்பம் எம்மிடம் சேர்ந்திட
என்றும் கைதொழுவோம்-நாளும்
தொல்லைகள் இன்றி சுகத்துடன் வாழ
தொடர்ந்து அருள்புரிவான்

நாட்டினில் நம்மவர் நன்மையும் பெற்றிட
நாளும் துணைபுரிவான்-எங்கள்
வீட்டினில் மங்களம் பொங்கிப் பெருகிட
வேண்டும் வரம் தருவான்

போட்டி பொறாமைகள் பூமியில் புதைந்திட
புதுமைகள் செய்திடுவான்-அவன்
காட்டும் கருணையாய் காசினி என்றுமே
களிப்புடன் நிலைத்திருக்கும்.

புசல்லாவை குறிஞ்சிநாடன்

## நல்லையின் நாயகனே...

நல்லையின் நாயகனே
நலமருளும் வேலவனே
தொல்லைகள் அற்ற வாழ்வை
தொடர்ந்தெமக்குத் தந்திடுவாய்
உற்சவ காலத்தில் உள்வீதி
வலம் வந்து
திருவடி பணிந்தேற்றி-உன்
திருப்புகழைப் பாடிடுவோம்

நிரோஜா சிவநாதன், மானிப்பாய்.

## கடைக்கண் பார்வை நல்காயோ

கான மயில் வாகனனே
கருணை கொண்ட வேலவனே
பானை வயிற்றோனின்
பாசமுள்ள சகோதரனே
குஞ்சரி மணாளனே
குற்றம் களைபவனே
வெஞ்சமரில் சூரனை அழித்தவனே
தேவர்கள் துயர் தீர்த்தவனே
நெஞ்சம் நெகிழ்ந்து துதிக்கின்றோம்
நின் கடைக்கண் பார்வை நல்காயோ நல்லைக்கந்தா!

செல்வி தர்மகுலசிங்கம் சுதர்சினி, நல்லூர்.




# மற்றொரு கோணம்



## உயிரின் இயல்பே காதலாக மலரும்போது அதற்குத்தான் ஆன்மீகம் எனப்பெயர்

**வேலைக்குப் போகும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? குடும்பத்தில் குழப்பம், குழந்தை வளர்ப்பில் சிரமம் எல்லாம் உண்டாகிறதே?**

ஆணாக இருப்பவர்கள் தேவையானளவு சம்பாதிக்காததனால் தானே பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். இது பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயமே தவிர ஆண்- பெண் பாலினம் சம்பந்தப்பட்டதல்ல. ஆணுக்கு நிகரா பெண்கள் உழைப்பது காலங்காலமாக நடந்து வந்திருக்கிறது. விவசாய முறை வாழ்க்கை வாழ்ந்த போது,

**ஆன்மீகம் 16**

ஆண்களும் பெண்களும் உழைப்பார்கள். குழந்தைகள் வயல் ஓரங்களில் விளையாடிக் கொண்டிருப்பர். இன்று ஆண்கள் வேறெங்கோ வேலைக்குப் போவதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான் பெண்கள் வேலைக்குப் போவதற்கும். இது புதிதில்லை.


சமூகத்தில் நடக்கிற ஒவ்வொரு சிறிய மாற்றம் குறித்தும் அனாவசியமாக அலட்டிக் கொள்ளாதீர்கள். சமூகமும் சரி, தனி மனிதனும் சரி கால மாற்றங்களுக்கேற்ப தாங்களும் மாறிக்கொண்டு தேவையானதைச் செய்ய வேண்டுமே தவிர, எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

**குடி குடியைக்கெடுக்கும் என்று பிரச்சாரம் செய்து கொண்டே சாராயம் உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது அரசாங்கம். புகை நமக்குப் பகை என்று பிரச்சாரம் செய்து கொண்டே இன்னும் சில சிகரறெற் கம்பனிகளுக்கு, லைசென்ஸ் கொடுத்து கோடிகோடியாக வரி வசூல் செய்கிறது அரசாங்கம். இத்தகைய சமூக முரண்பாடுகள் தானே மனிதனைத் தீயோனாக்குகிறது. இதை எப்படி மாற்றுவது?**

விஷம் அடைத்த புட்டியின் மீது விஷம் என்று எழுதியிருக்கிறார்கள். எனென்றால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காக. "சரி நான் அதை குடிக்கிறேன்" என்று நீங்கள் சொன்னால், எப்படி? உங்களுக்கு எது நல்லது எது கெட்டது என்று தேர்வு செய்கிற சுதந்திரத்தை தந்திருக்கிறார்கள். சிகறெற், மதுவை யாராவது தடை செய்தால் அதற்கும் போராடுகிறீர்கள். எனவே உங்களுக்கு அதைத் தந்தார்கள். அரசாங்கம் அவற்றைத் தடைசெய்தால் அதனை அடிமைத்தனம் என்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையை அவர்கள் நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? எது கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் உங்களுக்கு எது வேண்டும் எது வேண்டாம் என்று தீர்மனிக்கின்ற உரிமை உங்களிடம்தான் இருக்கிறது.

**ஆவிகளுடன் பேச முடியுமா?**

ஆவிகளுடன் பேசமுடியுமா என்பது ஒரு புறம் இருக்கட்டும் ஆவிகளுடன் பேசுவது அவசியமா என்று முதலில் பாருங்கள். ஒருமனிதர் இறந்து விட்டார் என்றாலே என்ன அர்த்தம்? உங்களிடமிருந்தும் இந்த உலகத்திடமிருந்தும் அவர் விடுதலையாகிப் போய்விட்டார் என்று அர்த்தம்.



போனவரோடு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? பலரும் உயிரோடு இருக்கும்போது, அவர்கள் முகத்தைக் கூடப் பார்ததில்லை. அவர்களோடு பேசியதில்லை. போன பிறகு அவர்களிடம் பேசுவதால் எதாவது பயன் உண்டா என்ன?

பலபேர் தாங்கள் பக்கத்து வீட்டுக்காரரோடு பேச மாட்டார்கள் வீட்டில் இருப்பவர்களோடு கூட பேசமாட்டார்கள். ஆனால், ஆவிகளுடன் பேசுவதில் ஆர்வம் வருகிறது. சக மனிதர்களிடம் அன்பாகப் பேசிப் பழகினாலே போதும். ஆவிகளோடு பேச்சு வார்த்தை அவசியம் இல்லை.

**காதலர் தினம் கொண்டாடப் படுவதை நீங்கள் ஏற்கிறீர்களா?**

இந்தச் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமான ஈர்ப்பைத்தான் காதல் என்று நினைக்கிறார்கள். உடலின் இரசாயன மாற்றங்கள் ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்குகிறதே. அது மட்டு மல்ல... காதல் என்றால் மன நிலையிலும் உணர்வு நிலையிலும் ஏற்படுகிற ஆழமான ஈடுபாடு. இந்த ஈடுபாட்டால் புதுவிதமான ஆனந்தத்தை மனிதன் உணர்கிறான். இந்த ஈடுபாட்டைச் செய்கிற செயல்களில், விளையாட்டில், தியானத்தில் கொண்டு வர முடியும். எதை நீங்கள் ஈடுபட்டுச் செய்தாலும் அது காதல்தான். எனவே ஒவ்வொரு தினத்தையும் நீங்கள் காதலோடு கொண்டாடுவீர்கள் என்றால் அந்தக் காதலர் தினக் கொண்டாட்டங்கள் ஏற்கக்கூடியவைதான். உயிரின் இயல்பே காதலாக மலரும் போது அதற்குத்தான் ஆன்மீகம் என்று பெயர்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ்... மொழி... சில பிற... பல

**04**

## தமிழ்... மொழி, மற்றும் சிறுபல விடயங்கள், பல சிறு விவகாரங்கள் சம்பந்தமான குறு ஆய்வு

திராவிடம் என்ற சொல் மிக ஆதியானது என்று கூறப்படுகின்றது. திராவிட மொழிக்கூட்டத்துடன் பிணைந்த இனங்களை பலரும் பல்வேறு பெயர் கொண்டு அழைத்தனர். மேற்கத்தேய மொழி வல்லுனர்கள் 'மலபார்', 'தமுலி' என்றனர். திராவிட மொழிகள் நிஷத மொழிகள் என்றும் குறிப்பிடப்பட்டன. திராவிட மொழிகளை முதன்முறையாக சீரிய, ஆழமான முறையில் ஒப்பிலக்கண, ஒப்பிலக்கிய வகைப்பாட்டில் ஆராய்ந்த ஆர்.கால்ட்டுவெல் (Dr.R.Caldwell) தான் திராவிடம் என்ற பதத்தை முன்னுக்குக் கொண்டு வந்தார் கி.பி. 7 ஆம்நூற்றாண்டளவில் வாழ்ந்த சமஸ்கிருத அறிஞர் குமரிலப்பட்டர், தென்னிந்திய பாஷைகளை 'ஆந்திர -திராவிட பாஷஷா' என்றார். வடக்கத்தைய பிராமணிய இனத்தார் தென்னிந்தியர்களை "பஞ்ச திராவிடா" என்று விழித்தற்கும் நிரூபணம் உண்டு.

அறியும்படியான, பதிக்கப்பட்டதான சரித்திரத்தின் வகையீடுக் கூறுகளின் படிக்கு வரியுருவில் போடப்பட்ட அதியாதிகால தமிழ் எழுத்து கிறிஸ்துவுக்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டதாக அறியக் கிடைக்கிறது.

மிகச் செம்மையான தெளிவு இல்லாமல் குத்தப்பட்ட கல்வெட்டு உருபுகளே தமிழ் பாஷையின் தோற்ற வெளிப்பாடாம். அரச பரம்பரையினர் (Monarchy) பிரபு/உயர்குலத்தேர் (Noeility/Aristocrats)> மதகுருமார் (Priests) ஆகியோரின் முதன்மைத் தலைவர்களின் வீர தீர சாகசங்களை, செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்கோ, இறந்த இப்பேறப்பட்டவரின் கல்லறைகளில் இவர்களைப்பற்றி தகவல் தருவதற்கோ என்று ஆரம்பித்தது தான் கல்வெட்டு(Epigraph).

**"கெடிமும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

கற்பாறைகளிலும், கற்படங்குகளிலும் கல்லறை மூடு துண்டங்களிலும் இந்த விபரங்கள் தொடக்க கால செம்மையடையா மொழி வரி உருவில் தீட்டப்பட்டன. சமாதி சாசனங்களே இவற்றில் அதிகம். சமஸ்கிருத பிராமியை நெருங்கியதான தமிழ் பிராமியிலேயே இவை ஆரம்ப காலத்தில் குறிக்கப்பட்டன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவிலேயே முதன் முறையாக இந்தக் கல்வெட்டுப் பதிவுகள் குத்தப்பட்டதற்கான நிரூபணங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதே காலத்தை மருவி மட்பாண்ட வஸ்துக்கள், துண்டங்கள்,ஓடுகள் என்று ஆதிகால முதற் தமிழ்வரி வடிவங்களைக் கொண்ட பிற சான்றுகளும் அகழ்வாராய்சியில் கிடைத்திருக்கின்றன. இந்த அடிக்காலத்தில் இருந்து கி.பி. 300 வரையான காலம் சங்ககாலம என வரையறுக்கப்பட்டுள்ளது. (கி.பி. 3ஆம், 4ஆம் நூற்றாண்டுகள்)

தமிழ்சச்சங்க (முதல்,இடை,கடை) இலக்கியங்களின் சீரேறு உச்சக்கட்ட காலம் இதுவாம். தமிழின் முதற் பெரும் நூலாக ஒப்பப்படும் தொல்காப்பியம் கிட்டத்தட்ட கி.மு. முதலாம் நூற்றாண்டில் தொல்காப்பியரால் வரையப்பட்டது. எந்தக் கணிசமான செம்மை கொண்ட, பண்டைய பாஷைகளினதும் ஏராளமான தொடக்க கால இலக்கிய முன்முயற்சி பதிவுகள் பற்பல காரணிகளால் தொலைந்தழிந்து போனமை கண்கூடு. தமிழும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆயினும் தமிழ் மொழியின் பழைய வீறு கூறும் செல்காந்தையை நிலைப்படுத்த, மேல்/கீழ் கணக்கு நூல்கள் அழியாது கிடைக்கப் பெற்றன. மேல்கணக்கில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவும் கீழ்க் கணக்கில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் உள. இந்த இடையில் (இரண்டாம் நூற்றாண்டு கி.பி) சிலப்பதிகாரம், மணிமேகலை.. ஆகிய ஐம்பெரும் காப்பியங்களின் இரட்டை நூல்கள் பிறந்தன. (சீவக சிந்தாமணயைத் தவிர இவை இரண்டும், மற்றும் முழுமையாகக் கிடைக்கப் பெறாத குண்டலகேசி, வளையாபதி ஆகிய நான்கு நூல்களும் காப்பிய வகையில் வராதவையென வாதிடுவோரும் உளர். வட மொழியில் தாண்டி, எழுதிய

**சிறீனோ சிறீ-சிறீசு**

"காவிய தரிசன" தையண்டி தமிழில் வந்த தண்டியலங்காரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தலைவன், தலைவி என்ற வரலாறு, அறம்-பொருள்-இன்பம்-வீடு என்ற நான்கும் உள்விழுத்தும் நூல் விரிவு ஆகியன போன்றவை மேற்படி நான்கு காப்பியங்களிலும் இல்லைதான்.

(தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்




(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)

**இறைவழிபாடு இன்பம் சேர்க்கும்**

*திட்டமிடாது திடீர் திடீரென முடிவெடுக்கும் மிதுன இராசி நேயர்களே!*

உரக்கப் பேசி உள்ளத்தில் இடம் பிடிப்பவர்கள் நீங்கள். இரக்க சிந்தனை உங்களுக்கு இருந்தாலும் எளிதில் எதையும் கொடுத்துவிடமாட்டீர்கள். ஆனால் மற்றவர்களை கொடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்துவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நண்பர்களாக இருந்து இரவு-பகலாக பாடுபட்டு எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அடிக்கடி உங்களுக்கு ஏற்படும் மன மாற்றத்தையும் அலட்சியப் போக்கையும் மட்டும் நீங்கள் மாற்றிக் கொண்டால் அதிர்ஷ்ட தேவதை உங்கள் இல்லத்திலேயே குடியிருக்கும் சூழ்நிலை உருவாகும்.

உங்களுக்கு இந்த ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அர்த்தாஷ்டமச்சனி விலகும் நேரத்தில் திடீர் பிரச்சினைகள் உருவாகலாம். இதுவரை சனியால் நன்மை அடைந்தவர்கள் இப்பொழுது விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. இதுவரை பாதிப்பின் பிடியில் சிக்கியிருந்தவர்கள் இனிப் படிப்படியான முன்னேற்றம் காண பலரின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

தனாதிபதி சந்திரன் பத்தில் சஞ்சரித்து அதை அஷ்டமாதிபதி பார்ப்பதால் தொழிலில் பிறரை நம்பி செயற்பட்டவர்கள் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். எனவே மற்றவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தால் காரியம் முடிந்தாலும் காசு கைக்கு வருவது அரிது. எனவே சனியின் ஆதிக்கம் சஞ்சலங்களை உருவாக்காதிருக்க காகவாகனத்தானை திருப்திப்படுத்த சனி கவசம் பாடுவது நல்லது. சனியின் பாதிப்பிலிருந்து விடுபட அனுமன் கவசம் பாடி வழிபாடு செய்யலாம்.

என்ன இருந்தாலும் சிந்தித்துச் செயற்பட்டால்தான் இம்மாதம் சிக்கல்களிலிருந்தும் சிரமங்களிலிருந்தம் விடுபட இயலும். அது மட்டுமல்ல இறைவழிபாட்டின்மூலமும் இனிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள சுய ஜாதகத்தையும் புரட்டிப் பாருங்கள்.

5,12 க்கு அதிபதியான சுக்ரன் மூன்றில் வரும் பொழுது பயணங்களால் பலன் கிடைக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித் துக் கொள்வீர்கள்.

உடன் பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஊர்மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். எதிர்வரும் 31 ஆம் திகதி சிம்ம இராசியில் புதனும் சஞ்சரிக்கப் போவதால் தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். சேமிப்பு உயரும். செல்வாக்கு மேலோங்கும்.

கடக இராசியில் எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி செவ்வாய் நீச்சம் பெறுகிறார். மறுநாள் புதன்கிழமை கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறுகிறார். இந்த நேரம் தான் உங்களுக்கு மிகுந்த நன்மை தரும் நேரமாகும். செவ்வாய் மற்றும் சுக்ரன்நீச்சம் பெற்றால் எதிர்பாராத திருப்பங்கள் உங்கள் வாழ்வில் ஏற்படும். வேலைவாய்ப்பு முதல் மாலை வாய்ப்பு வரை வீடு தேடி தகவல் வரும். அதே நேரத்தில் சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினை சுமுகமாக முடியும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிக பொறுப்புக்கள் வந்து சேரும்.

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். கூட்டாளிகள் விலகினாலும் புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

இம்மாதம் ஆறாமிடத்து இராகுவால் அஷ்டலட்சுமி யோகம் செயற்பட இலட்சுமி கவசம்பாடி அஷ்ட லட்சுமிகளையும் வழிபாடு செய்யுங்கள்.

இம்மாதம் பணப்புழக்கம் அதிகரிக்கும் மாதமாக அமையும். உறவினர் வழியில் மனக்கசப்பு தரும் தகவல்கள் வந்து சேரலாம். குருவின் பார்வை 3,5 ஆகிய இடங்களில் பதிவதால் உடன்பிறப்புக்களுக்கு அல்லது குழந்தைகளுக்கு கல்யாண வாய்ப்புக்கள் கைகூடலாம்.

ஆன்மீகப் பயணம் அதிகரிக்கும் நேரமிது. கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. மாதக் கடைசியில் இடம், பூமி வாங்கும் எண்ணம் கைகூடும்.




(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

**இடமாற்றத்தால் இனிய மாற்றம் வரும்!**

*நினைவுத்திறனால் நினைத்ததை உடனடியாக முடித்துக் காட்டும் கடக இராசி நேயர்களே!*

நீங்கள்வருங்காலதலைமுறைகளுக்குவழி காட்டியாக வாழ வேண்டுமென்று விரும்புபவர்கள். உங்களைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டேயிருக்கும். சாதாரண மனிதர் முதல் சக்கரவர்த்தி வரை பழக்கம் வைத்திருப்பீர்கள். எதையும் அலட்டிக் கொள்ளாமல் அதட்டிப்பேசியே காரியத்தை சாதித்துக் கொள்பவர்கள் நீங்கள்தான்.

உங்களுக்கு இந்த ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சி அதிகரிக்கும் விதத்தில் இராசிநாதன் சந்திரன் உலா வருகிறார். பத்தில் சஞ்சரிக்கும் குரு பதவியை மாற்றினாலும் புதிய பொறுப்புகளை கொண்டு வந்து சேர்ப்பார். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது தான் நல்லது.

கேது உங்கள் இராசியைப் பார்ப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லை ஏற்படலாம். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புக்கன் வந்து அகலும். அடுத்தவர்களை நம்பிச் செய்த சில காரியங்களில் இடையூறுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் காரியத்தை முடித்துக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். எனவே இம்மாதம் எதைச் செய்தாலும் முன் யோசனையுடன் செய்வது நல்லது.

செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகள் வழியே ஒரு பெரும் செலவு செய்ய நேரிடும். அரசு வழியில் எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். தொழில் மாற்றச் சிந்தனைகளை தள்ளி வைப்பது நல்லது. சனி விலகிய பின்னர் அர்த்தாஷ்டமச்சனியாக மாறப் போவதால் அதற்கு முன்னதாகவே பரிகாரங்களை மேற்கொள்வது உத்தமம். அனுமன் வழிபாடும் அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களும் வளர்ச்சி கூட்டும்.

மாதத்தின் தொடக்க நாளிலே 4,11 க்கு அதிபதியான சுக்ரன் சிம்மத்தில் இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இந்த சுக்ர, சூரிய சேர்க்கையும் எதிர்வரும் 31 ஆம் திகதி அதோடு இணையும் புதனின் ஆதிக்கமும் தொழில் வளர்ச்சியை மேலோங்க வைக்கும்.

தொல்லை தந்தவர்கள் விலகுவர். அருளாலர்களின் ஆலோசனைப்படி நடந்து ஆதாயத்தை பெறுவீர்கள். குடும்ப ஒற்றுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி கடக இராசியில் செவ்வாய் நீச்சம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகள் வழியில் பிரச்சினைகளை உருவாக்கலாம். பெரும் முதலீடு செய்து தொழில் செய்பவர்கள் அருகில் இருப்பவர்களை கூர்ந்து கவனித்துக் கொள்வது நல்லது.

## சிவல்புரிசிங்காரம்

அதே நேரத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதி சுக்ரன் நீச்சம் பெறுவது உங்களுக்கு நன்மையை வழங்கும். அந்நிய தேசத் தொடர்பு எண்ணியபடியே வந்து சேரும். அடுத்தவர்களுக்கு வாங்கி கொடுத்த தொகையும் கேட்ட உடன் கிடைத்து மகிழ்ச்சியை உருவாக்கும்.

இராசிநாதன் சந்திரனைப் பார்க்கும் சனியால் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்கவும். பணவரவு திருப்தி தரவும் ஆனைமுகப் பெருமானுக்கு அறுகம்புல் மாலை சூட்டி வழிபாடு செய்து வாருங்கள்.

விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும் மாதமிது. வாகன மாற்றம் செய்வது நல்லது. வருமானம் திருப்தி தரும் என்றாலும் மாதத்தின் மையப்பகுதியில் உறவினர்களால் திடீர் செலவுகள் உருவாகலாம்.

கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். வீடு தேடி வரும் விருந்தினர்கள் உங்களுக்கு ஆதாயம் தரும் தகவலொன்றைச் சொல்வர். விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும். மனக்குழப்பம் அகல மகேஸ்வரன் வழிபாட்டை மேற்கொள்வதோடு சர்ப்ப ப்ரீதியும் செய்து கொள்வது நல்லது. (தொடரும்)

# புதுடில்லி கருத்தரங்குக்கு ஈ.பி.டி.பி.க்கு அழைப்பில்லை

(புதுடில்லி)

அரசில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி.யை இந்திய அரசாங்கம் ஒதுக்கி வைக்கத் தொடங்கியுள்ளதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசாங்கத்தின் பின்புல ஆதரவுடன் புதுடில்லியில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள கருத்தரங்கிற்கு இலங்கையிலிருந்து ஏழு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் ஈ.பி.டி.பி.க்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை என புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் சில கேள்வி எழுப்பியுள்ளன.

வடக்கு அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள ஈ.பி.டி.பி.க்கு இந்தக் கருத்தரங்களில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கை உலக அபிவிருத்திக்கும் மனித உரிமைகளுக்குமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழரசுக்கட்சி சார்பில் மாவை சேனாதிராஜாவுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஆனந்தசங்கரியும் ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதனும் புளொட் சார்பில் சித்தார்த்தனும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் வரதராஜப்பெருமாள் மற்றும் சிறிதரன் ஆகியோரும் ஈ.என்.டி.எல்.எவ் சார்பில் பரந்தன் ராஜனும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் ஈ.பி.டி.பி பிரதிநிதிகள் எவரும் இந்தக் கருத்தரங்கிற்கு அழைக்கப்படவில்லை. டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் அவர் புதுடில்லி வர இந்திய அரசாங்கம் எவ்வாறு அனுமதி அளித்தது என்று உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருந்தது.

இந்த நிலையிலேயே ஈ.பி.டி.பி.யை இந்தியா ஒதுக்கத்தொடங்கியுள்ளதாகவும் தகவல்கள் கூறு கின்றன. (எ-1)

### வெலிக்கடைச் சிறையில்

# கைதிகளையும் விளக்கமறியலில் உள்ளோரையும் பிரிக்க நடவடிக்கை

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகளையும் விளக்கமறியலில் உள்ளவர்களையும் நேற்று முதல் பிரித்து வைப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் இடம்பெறக் கூடிய முறைகேடுகளை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வி.ஆர்.த.சில்வா குறிப்பிடுகின்றார்.

சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சந்திப்பதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை கருத்தில் கொண்டே இரண்டு பிரிவினரையும் பிரிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த சிறைச்சாலை ஆணையாளர் இதன் மூலம் நிர்வாக நடவடிக்கைகளும் இலகுவானதாக தெரிவித்தார்.

இதற்கமைய சிறைக்கைதிகள் மற்றும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சந்திப்பதற்காக சிறைச்சாலைக்கு வருவோருக்கு தனித்தனி நுழைவாயில்களும் நேற்று முதல் திறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-2)

# வவுணதீவில் கைது செய்யப்பட்ட 18 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்திலுள்ள தாண்டியடி நடராசானந்தபுரம் பகுதியில் படையினருக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையையடுத்து கைது செய்யப்பட்ட 18 இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.கருணாகரன் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த இளைஞர்களை சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்குமாறும் அவர் கூறினார்.


கைது செய்யப்பட்ட 18 இளைஞர்களும் நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.கருணாகரன் முன்னிலையில் வவுணதீவுப் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டபோதே அவர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

தாண்டியடி நடராசானந்தபுரம் பகுதியில் மர்ம மனிதர்கள் நடமாடுவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் பொதுமக்கள் அம்மர்ம மனிதர்களை பிடிக்க முயன்றபோது படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை எற்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்தே 18 இளைஞர்களும் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த இளைஞர்கள் 18பேரும் தற்போது நீதிவானின் உத்தரவிற்கமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேவேளை தாண்டியடி சமுர்த்தி வங்கி சங்கத்திற்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸாரை தாக்க முற்பட்டதனாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-2)

# 18ஆவது அரசியலமைப்பை எதிர்ப்போம் முதுகெலும்பிருந்தால் முன்வாருங்கள்

## அழைப்பு விடுக்கிறார் பொன்சேகா



(கொழும்பு)

18ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை எதிர்த்து குரல் எழுப்புவதற்கு முன்வருமாறு முதுகெலும்புள்ள அமைச்சர்களுக்கு அழைப்பு விடுப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா உடற்கூற்று சிகிச்சைகளுக்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேல் தோற்பட்டையில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக சரத் பொன்சேகாவிற்கு இரண்டு வார காலம் உடற்கூற்று சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# உண்டியல் மூலம் நிதி சேகரித்தவர்கள் கைது

(கொழும்பு)

உண்டியல் மூலம் நிதி சேகரித்துக் கொண்டிருந்த களனி பல்கலைக்கழக மாணவர்கள் 6 பேர் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பிஹிதோர அபியாஸ் எனும் நிகழ்ச்சியாக உண்டியல் மூலம் நிதி சேகரித்துக் கொண்டிருந்தபோது இம் மாணவர்கள் கைது செய்யப்பட்டதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் பிக்கு மாணவர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

உண்டியல்மூலம் நிதி திரட்டும் நடவடிக்கை நாடு முழுவதும் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களால் ஒரே சமயத்தில் நடைபெறுகிறது. இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்திலிருந்து போதிய உதவிகள் கிடைக்காததால் நிதி திரட்டுவதற்கு மாணவர்கள் வீதியிலிறங்கினர் என அவர் கூறினார். (4-2)

# உடலில் ஏற்படும் காயங்களூடாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

வயல் மற்றும் விவசாய நிலங்களில் பட்டம் விட்டு விளையாடிய 15சிறுவர்கள் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சிறுவர்களின் உடலில் ஏற்படும் காயங்கள் ஊடாக எலிக்காய்ச்சலுக்கான பக்றீரியா உடலுக்குள் பரவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இதனைவிட கொஹிலா கீரை பறிப்பதற்குச் சென்ற சிலர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த வருடத்தில் இதுவரை எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள 4ஆயிரத்து 752பேர் இனங் காணப்பட்டுள்ளதுடன் அவர்களில் 60பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது. (4-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1000-ஹங்கேரி நாடு முதலாம் ஸ்டீபன் என்பவனால் உருவாக்கப்பட்டது.

★ 1866-அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

★ 1914-முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்சை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றின.

★ 1917-இலங்கையில் ஒரு ரூபாய்த் தாள் வழக்கப்பட்டது.

★ 1940-மெக்சிக்கோவில் இடம் பெற்ற கொலை முயற்சி ஒன்றில் ரஷ்யப் புரட்சியாளர் லியோன் ட்ரொட்ஸ்கி படுகாயமுற்று அடுத்த நாள் மரணமானார்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ருமேனியா மீது சோவியத் ஒன்றியம் தாக்குதலை ஆரம்பித்தது.

★ 1948-இலங்கை குடியுரிமை சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 10 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.

★ 1953-ஐதரசன் குண்டைத் தாம் சோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.

★ 1960-செனெகல் மாலிக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனி நாடாக அறிவித்தது.

★ 1968-பனிப்போர் 2 இலட்சம் வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்சிலவாக்கியாவினுள் புகுந்தன.

★ 1975-நாசா வைக்கிங் 1 விண்கலத்தை செவ்வாயை நோக்கி ஏவியது.

★ 1977-நாசா வொயேஜர் 2 விண்கலத்தை ஏவியது.

★ 1988-ஈரான்- ஈராக் போர்: 8 ஆண்டுகள் போரின் பின்னர் போர் நிறுத்தம் உடன்பாடாகியது.

★ 1991-எஸ்தோனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகி மீண்டும் தனி நாடாகியது.

★ 1997-அல்ஜீரியாவில் 60 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2006-கத்தோலிக்க அடிகள் ஜிம் பிரவுண் மற்றும் அவரது உதவியாளர் விமலதாஸ் ஆகியோர் அல்லைப்பிட்டியில் காணாமல் போனார்கள்.

★ 2006-நமது ஈழநாடு பணிப்பாளர் முன்னாள் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமகராஜா சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1910-ஈரோ சாரினென், கட்டடக் கலைஞர் (இ.1961)

★ 1946-நாராயண மூர்த்தி, இந்தியத் தொழிலதிபர்

### இறப்புக்கள்

★ 1823-பாப்பரசர் ஏழாவது பயஸ் (பி.1740)


★ 1854-பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மன் மெய்யியலாளர் (பி.1775)

★ 1914-பாப்பரசர் பத்தாவது பயஸ் (பி.1835)

★ 1915-போல் ஏர்ள்ரிச் ஜேர்மன் அறிவியலாளர் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1854)


★ 1917-அடொல்ஃப் வொன் பாயெர், ஜேர்மன் வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1835)

★ 1961-பேர்சி பிறிட்ஜ்மன், அமெரிக்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1882)



★ 1944-முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் பிறந்த தினம் இன்றாகும்.


# நவீன எண் சோதிடம்



## நன்றாகப் பேசி காரியம் சாதிப்பதில் வல்லவர்கள்

24

### உடல் எண் 3 உயிர் எண் 4



3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்து, தேதி,மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால், இவர்கள் குரு,இராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். மூன்றாகிய குரு உடல் எண்ணாகவும், நான்காகிய இராகு உயிர் எண்ணாகவும் வந்திருப்பதால் ஞானம் மிகுந்தவர் என்று கூறலாம். இளமையிலேயே பேரறிவும், பேச்சுத்திறனும் கொண்ட இவர்கள் அரசியல், அரசாங்க உத்தியோகம் போன்றவைகளில் இருப்பார்கள். அதிகம் பேசும் இவர்கள் கோர்ட்டுக்களில் வழக்காடும் சிறந்த வழக்கறிஞராகவும் விளங்குவர்.

நன்றாக பேசி காரியம் சாதிப்பதில் வல்லவர். பிறந்த தேதிக்குப் பொருத்தமாகப் பெயர் அமைந்துவிட்டால் பொதுச் சேவை செய்து கொண்டு தானும் உயர்வர். அனால் பெயர் பொருத்தமாக அமையாவிட்டால் வெட்டிப் பேச்சும், வீண்விவாதங்களும் செய்து கொண்டிருப்பர். பேச்சாலும், எழுத்தாலும் பொருளீட்டக்கூடிய இவர்களுக்குச் சோதனை அதிகம் வரும். பிறருடைய காரியங்களுக்காக சென்று மாட்டிக் கொள்ளுவார்கள். ஆனால் இவர்களுக்கு வரக்கூடிய இடர்பாடுகளை தைரியமாகச்சமாளிப்பர். பணம் சம்பாதிப்பது கஷ்டமாக இருந்தாலும் பணம் இருக்கின்ற போது குதுகலாமாகச் செலவு செய்வார்கள்.

பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும் அலை போன்ற முடியும் கொண்ட இவர்கள் கவர்ச்சியாக காட்சியளிப்பர். பெண்கள் இவர்களிடம் மயங்குவர். பெண்கள் விடயத்தில் நிதானமாகப் பழகிக் கொள்ள வேண்டும். 6 எண் வருகின்ற மாதிரி பெயர் அமைந்திருந்தால் மது, மங்கை, சூது போன்றவற்றில் ஏதாவது ஒன்றில் மனம் இலயித்து விடும். பொது சன உபகாரியாகவும் பலருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடனும் வாழ்வார்.

இவர்களைச்சுற்றி நண்பர்கள் இருந்து கொண்டே இருப்பர். இவருடைய உதவியும் அறிவுரையும் எல்லோருக்கும் தேவைப் படுவதால் நண்பர்கள் இவர்களை விட்டுப்பிரிய மாட்டார்கள். இவர்கள் பேரம் பேசுவதாலும் கமிஷன் வியாபாரம் செய்வதாலும் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு பொருட்களை அனுப்புவதன் மூலம் பணம் சம்பாதிக்கும் யோகமுடையவர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமை'யாவிட்டால், இவருடைய வியாபாரம் சிறப்பாகாது. இவர்களுக்கு வாகன யோகம் இருப்பதால், வாகனம் ஒட்டுவதில் ஆர்வம் உள்ளவராக இருப்பர். கடல் கடந்த பயணங்களிலும் புனித யாத்திரை செய்வதிலும் ஆர்வம் மிக்கவராவர். இவர்கள் சம்பாதிக்கும் பணத்திற்கு செலவு காத்துக்கொண்டிருப்பதால், சேமிப்பு என்பது சிறிது கடினமானது. பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் ஓரளவு நல்ல சேமிப்பு உண்டாகும்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் புகழ், அந்தஸ்து, செல்வம், நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், வீடு, வாகனம் பெற்று பலருக்கு உதவி புரியும் மனிதனாக வாழ்கின்றார்.

**தொழில்**

இவர்கள் பேரம் பேசுவதாலும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாலும் பேச்சாலும் எழுத்தாலும் வாகனத்தாலும் பொருள் சம்பாதிக்கின்றனர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், பொருள் சம்பாதிப்பது மிகக் கஷ்டமானதாகி விடும். அல்லது சம்பாதித்த பொருள் வீண் செலவாகும். கீழே குறிப்பிட்டபடி பெயர் பொருத்தமானதாக அமைத்துக் கொள்ளவும்.

**நோய்**

அதிகம் பேசுவதால் வயது ஏற ஏற நெஞ்சுவலி வரக்கூடும். வாயு சம்பந்தப்பட்ட கோளாறுகளும் மூட்டு வலி, தலைவலி போன்றவை கள் வந்து நீங்கும். இவர்கள் நோயிலிருந்து விடுபட 46 எண் ணில் பெயரை அமைத்துக்கொள்ள வேண்டும்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

**பெயர் அமைக்கும் முறை**

குரு, இராகு ஆதிக்கம் கொண்டவர்களுக்கு பெயர் 1 என்ற சூரியனிலோ, 3 என்ற குருவிலோ வர வேண்டும். இந்த எண்ணிக்கையில் பெயர் அமைந்து விட்டால், புகழும் பெயரும் அந்தஸ்தும் பெற்று, வீடு , வாகனம், நிலம், உயர்பதவி போன்றவைகளை அடைவர். 21,39,19,37, 46,64,போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொள்ளலாம். ஆனால் வியாபார விலாசமும் இந்த எண்ணிக்கையில் அமைய வேண்டும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-3,1

யோகமான தேதிகள்-3, 12,21,30; 1,10,19,28

யோகமான மோதிரக்கல்-கனக புஷ்பராகம்,எமிதிஸ்டு

யோகமான நிறம்-ரோஸ், ஒரேஞ்,கத்தரிப்பூ நிறம், வெளிர் மஞ்சள், வெளிர் நீலம்

ஆகாத தேதிகள்-6,15,24


ஆகாத நிறம்- பச்சை

* * *

### பெயர் எண்களின் பலன்

**71 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் பலருக்குப் போதிக்கும் மகானாகத் திகழ்வர். தன்னைப் பொறுத்தவரை பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்க நேரும். ஆனால் 5, 14, 23 போன்ற தேதியில் பிறந்திருந்தால் பலருக்கு போதிப்பதோடு, தான் பெரும் செல்வந்தனாகவும் பெரும் அறிவாளியாகவும் திகழ்வர். ஆனால் மற்றைய தேதியில் பிறந்ததவர்களுக்கு நற்பலன்கள் குறைவதால் குழப்பங்கள் வரும்.



**72 எண் பலன்**

கேதுவும் சந்திரனும் பொருத்தமானவர்களாதலால், இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் இளமையில் பல்வேறு அனுபவங்களால் “பத்தரை மற்றுத்தங்கம் ஆவர். இவர்கள் மிகுந்த நிதானமும் நிர்வாகத் திறமையும் கொண்டு ஏராளமாகப் பணம் சம்பாதிப்பர். தனது கஷ்ட நஷ்டங்களை பொருட்படுத்தாது உயர்ந்த நிலையை அடைவர். சொத்துக்களும் வீடு, வாகன அமைப்புக்களும் பெற்று வாழ்வர்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

**73 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் பொதுவாழ்க்கையில் ஈடுபடமாட்டார்கள். தன்னைப் பொறுத்தவரை ஒரு சுகமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு பல்வேறு துறைகளில் பணம் சம்பாதிப்பர். தன் வருமானத்தை வீடாகவோ, நிலமாகவோ ஆக்கிவிடுவர். யோகம் நிறைந்த வாழ்க்கையைக் கொண்ட இவர்கள் கெட்ட வழியில் இறங்க முற்படுவாரேயானால், இவ்வெண் திசை மாறிவிடும். இதனால், இவர்கள் எப்பொழுதும். தெய்வ வழிபாட்டை மேற்கொள்வது நலமாகும்.


**74 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் தன்னைச் சார்ந்த சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடுவர். ஆனால் இவர்களுக்கு நல்லபெயர் கிடைக்காது. கடைசியில் தமது தொண்டை மக்கள் உணரவில்லையென்று குறை கூறுவர் கண்ணிற் தெரிகிற மனிதனை நம்புவதைவிட மனதிற் தெரிகிற கடவுளை நம்புவது மேல் என் நினைப்பர். இவரது ஜீரண உறுப்பு, வலிமை குறைவதன் காரணமாக ஜீரணக் கோளாறுகள் வர வாய்ப்பு உள்ளது.

(தொடரும்)

# சுய வருமானத்தை ஈட்டித்தரும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை

15-VI



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதுவும் அவர்களது குடும்ப உறுப்பினர்களினது எதிர்கால வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்புகளையும் உள்வாங்கி குடும்ப வருமானத்தை இயன்றவரை உயர்த்த வேண்டிய தேவையும் தற்போது வடபகுதியெங்கும் எழுந்துள்ளது. கணிப்புக்கள் பலவாகினும் 59 ஆயிரத்து 500 விதவைகளைக் கொண்ட குடும்பங்கள் வடபகுதியில் போரின் விளைவாக வாழ்ந்து வருவதை இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கும் நிலையில் இக்குடும்பங்கள் குடும்பத்தலைவனை இழந்து நிர்க்கதியாயிருக்கும் இந்நிலையிலிருந்து மீண்டெழ அவசியமான வாழ்வாதார செயற்பாடுகள் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றுள் குடும்ப பெண்களால் உருவாக்கப்படக்கூடிய வீட்டுத்தோட்டம் வருவாயை பெருக்கக்கூடிய வாய்ப்பினை வழங்கக்கூடியதாகின்றது. முதலென்று அதிகமான நிதியினை வாரியிறைக்காது வசதிக்கேற்ப வளமான வீட்டுத்தோட்டத்தினை உருவாக்கிக் கொள்வதுடன் அதன் மூலமாக நிறைவான வாழ்க்கையில் அவர்களை பயணிக்கவும் வழிசெய்து கொடுக்க முடியும்.

மாதர் தம்மை இழிவு செய்யும் மனநிலையிலிருந்து மாறி அவர்களையும் சமூக அந்தஸ்தில் உயர்ந்தெழுந்தவர்களாக மாற்ற இனியதொரு செய்தியிது. பெண்களாக தமது உழைப்பை முன்னுறுத்தி முதலீடு செய்வதற்கான உறவுப்பாலமாக வீட்டுத்தோட்டத்தைக் கருதலாம். வீட்டுத்தேட்டத்திலிருந்து வருமானத்தை பெற திட்டமிட்டு பயிர்களை வளர்ப்பது உகந்ததாகும். குறிப்பாக குடும்பத்திற்குத் தேவையான நிறையுணவினை பெறும் அதே நேரத்தில் உற்பத்தியாகும் ஏனையவற்றை விற்பனை செய்வதன் மூலமாக தமது வருமானத்தையும் பெருக்கிக் கொள்ளலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



வீட்டிலுள்ள பெண்களது மென்மையான ஆனால் திறமையான வேலைகளை உள்வாங்கும் சிறந்த இடமாக வீட்டுத்தோட்டம் அமைகிறது. நாமே பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்குவதில் பெண்களது பங்கு அதிகமாகவே உள்ளது. இதற்காக எந்தவித அனுசரணையையும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னின்று உதவலாம்.

ஒரு கிழமையிலுள்ள ஏழு நாட்களுக்குமான இலைக்கறி வகைகளை வளர்த்து உணவாக்குவது சிறப்புக்குரியது. வல்லாரை, பொன்னாங்காணி, கங்குன், பொதினா, சிறுகீரை அல்லது முளைக்கீரை, அகத்தி, முருங்கை என ஏழு இலைக்கறி வகைகளுடன் இலைக் கோவா, லீக்ஸ், கோவா, வெங்காயத்தாள் என பலவற்றை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். இவற்றை திட்டமிட்டு தொடர்ச்சியாக சேதன முறையில் வளர்ப்பதன் மூலம் விற்பதற்குரிய விரும்பி வாங்கும் பொருளாக மாற்றிவிடலாம். அதிலும் சிறந்த தரமான பயிர்களாக தெரிந்து வளர்ப்பதனால் இதற்குரிய விலையும் அதிகமான தாகவே கிடைக்கும்.

பழவகைத் தாவரங்கள் அவசியமாக வீட்டுத்தோட்டத்தினுள் உள்வாங்கப்பட வேண்டும். வாழை, பப்பாசி, கொய்யா, மாதுளை இவற்றுடன் இட வசதியிருப்பின் மா, பலா என்பவற்றையும் இணைத்துக் கொள்ளலாம். வீட்டுத் தோட்டத்தில் பஷன் பழ கொடி, தேசி, தோடை, திராட்சை என இவற்றையும் வளர்த்து உணவாக்கிக் கொள்ளலாம்.

மூலிகைத் தாவரங்களுக்கும் இங்கே சிறப்பிடமுண்டு. வீட்டுத் தேவைக்கான கற்பூரவள்ளி, இஞ்சி, மஞ்சள், கறிவேப்பிலை, சிறுகுறிஞ்சா இவற்றுடன் இன்னும் தேவைப்படும் மூலிகைகளை வளர்க்கலாம். குறிப்பாக பெண்களின் தாய்மைப் பேற்றில் வெந்நீர் வார்ப்பதற்காக தேவைப்படும் ஐந்திலை மூலிகை வகையான நொச்சி, பருத்தி, ஆடா தோடை, வேம்பு, ஆமணக்கு ஆகியவற்றை வீட்டுக் காணியில் வேலியில் வளர்த்து வைப்பது அவர்களுக்கும் அயலவர்களுக்கும் தேவைக்கு உதவும். இனிவருங்காலத்தில் இவற்றையும் விற்பனைப் பொருளாக்கிக் கொள்ளலாம். இவ்விலைகளைத் தேடி குடும்ப தலைவர்கள் அலைந்து திரிவதை அறியும் போது இதற்குள்ளும் இவற்றை வளர்த்து முதலாக்கிக் கொள்ள வாய்ப்புண்டு.

வீட்டுத்தோட்டமென்றாலும் வீட்டுக்கு 5 தென்னைகளில் நான்கு மரங்கள் தேங்காய்களை தருவதும் ஒரு இளநீர் மரமாகவும் குறுகிய இடவசதிக்குள் பாக்கு மரங்களையும் நடுகை செய்யலாம்.

மேற்கூறியவற்றுடன் அழகுத் தாவரங்களையும் தேவை கருதி உள்ளடக்கலாம். நல்ல காட்சி என்றுமே மனதிற்கு இதத்தையும் ஆறுதலையுந்தரும். நல்ல சுகந்தமான காற்று அதிலும் மூலிகை கலந்த காற்று நன்றேயிருக்க வழிசெய்யும்.

பறவைகளின் ரீங்கார ஒலியுடன் இணைந்த இயற்கையை அனுசரித்த வாழ்க்கை முறைக்குள் எங்களனைவரையும் மேலும் உள்ளீர்க்க பலவகை தாவரங்களை எமது வீட்டிலே வளர்த்து நாமும் பிறரும் இன் புற்று வாழ வழிசெய்வோமாக. பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வாழ்வுமேம்பாட்டில் உள்வாங்கப் படும் திட்டங்களில் அவரவர் உழைப்பை உறுதி செய்யும் வீட்டுத்தோட்டம் போன்ற செய்முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது நல்லது. எம் இனிய உறவுகளின் வாழ்வு விருத்திக்கு எம்மாலான பங்களிப்பு என்றுமே அவசியமானது.

இனியொரு பசுமைப்புரட்சி ஒவ்வொருவரினதும் பங்களிப்புடன் அவரவர்க்கான சுத்தமான சுகாதாரமான உணவை பெறுவதிலும் அதுவே அவலப்பட்ட மக்களுக்கான அவசியமான உணவுத்தேவையை பூர்த்தி செய்வதுமாகவே இருக்க வேண் டும். வரப்புயர என கூறிவைத்த ஔவைப் பாட்டியின் கருத்தினையொத்து ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பெரிய வழி காண நாமனைவரும் இன்னும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். வீட்டுக்கு தோட்டமெனினும் அவையனைத்தும் ஒருமித்தால் அதுவே நாட்டுக்கான தோட்டம். நாம் நெல் உற்பத்தியில் செய்த புரட்சி தன்னிறைவடை யும் நிலையில் ஏனைய பயிர்களிலும் இதனை செய்து காண்பித்து எமது நாட்டி லிருந்தும் பயிர் உணவு வகைகள் ஏற்று மதியாகும் காலம் கனிந்திட வேண்டும். இதுவே எழுதும் இக் கைகளினதும் இக்கட்டுரை தொடரினதும் எதிர்பார்ப்பாகும். (தொடரும்)

# இலஞ்ச ஊழல்கள் தொடர்பாக தினமும் 25 ஆயிரம் முறைப்பாடுகள்

## ஜகத் பாலபட்டபெந்தி தெரிவிப்பு

(கொழும்பு)

இலஞ்சம் பெறப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக நாளாந்தம் 25 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைப்பதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

கடந்த மூன்று மாதங்களில் தமது அதிகாரிகள் மேற்கொண்ட 40 சுற்றிவளைப்புக்களில் 23 சுற்றிவளைப்புக்கள் வெற்றியளித்ததாக ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான ஜகத் பாலபெட்டபெந்தி குறிப்பிடுகிறார்.

சிலர் காணிப்பிரச்சினையுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்கின்ற போதிலும் அவற்றை இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் விசாரிக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் அரச சேவையிலுள்ள ஒருவர் இலஞ்சமாகப் பெற்ற பணத்தை கொண்டு தமது மனைவி அல்லது உறவினர் பேரால் அசையா அல்லது அசையும் சொத்துக்களை கொள்வனவு செய்திருந்தால் அது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கான அதிகாரம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# வடமாகாண சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேசிய கொள்கைத் திட்டம்

## அதன் பணிப்பாளர் அபேகுணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தேசிய கொள்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்காகின்றமை தொடர்பில் வடமாகாணத்திலிருந்து தகவல்கள் பதிவாகியுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சிறுவர்கள் தொழிலில் அமர்த்தப்படுகின்றமை தொடர்பில் அதிக தகவல்கள் பதிவாகியுள்ளதாக திணைக்களம் குறிப்பிடுகின்றது. இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாணத்திலுள்ள அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டமொன்று செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் 2 பிரிவுகளாக ஆரம்பம்

(கொழும்பு)

பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியின் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் இரண்டு கட்டமாக நடைபெறவுள்ளன.

இதற்கமைய இரண்டாம் வருட சகல மாணவர்களுக்கும் முதலாம் வருட சிங்கள மொழிமூல மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி ஏ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்பதாக விடுதிக்கு சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர முதலாம் வருட தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

குறிப்பிட்ட மாணவர்கள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு முன்னதாக தமது பெற்றோருடன் கல்லூரிக்குச் சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய மாணவர்களுக்கு கடந்த 11 ஆம் திகதி வழங்கப்படவிருந்த மூன்றாம் தவணை விடுமுறை கடந்த 3 ஆம் திகதியே முன்கூட்டியே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-2)

21) 

உருவில் தரப்பட்டுள்ள உயிர்க்குறியின் பெயர் என்ன?
1. கீழ்க் காலும் சுழியும் 2. விசிறியும் சுழியும்
3. மடக்கேறு 4. அரவு

22) 

இக்குறியீட்டினால் உணர்த்தப்படும் கருத்து யாது?
1. இங்கே பூ பறிக்கக் கூடாது
2. இங்கே புதைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
3. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியது
4. இங்கு தீபற்ற வைப்பது ஆபத்தானது.

23) ஏலந்தண்டு ராமநாதா ஏலந்தண்டு ராமநாதா
ஓவெலம்மா ராமநாதா ஓவெலம்மா ராமநாதா எனும் பாடல் எப்பாட்டுவகையைச் சார்ந்தது?
1. வண்டிப்பாட்டு 2. தோணிப்பாட்டு
3. அருவிவெட்டு 4. தொழிற்பாட்டு



24) இலங்கையை ஆட்சி செய்த அந்நிய நாட்டாரை எதிர்த்துப் போராடி நாடு கடத்தப்பட்ட ஒரு தியாகியின் படம் உருவில் உள்ளது. அவரது பெயர் என்ன?



1. மொனராவில் கப்பட்டிப்பொல திசாவ
2. கொங்காலேகொட பண்டா
3. வீர புரன் அப்பு
4. வண எஸ். மஹிந்த

25) இரட்டை எண்ணிக்கையில் இதழ்களைக் கொண்ட பூ எது?
1. நாமலர் 2. செவ்வரத்தை 3. அலரி 4. நித்தியகல்யாணி

26) இப்பக்கம் மேலே எனும் கருத்தை வெளிப்படுத்தும் குறியீடு எது?

1. 
2. 
3. 
4. 

27) தான் அமைக்கும் வசிப்பிடத்தைக் கொண்டே தனது இரையைப் பெற்றுக்கொள்ளும் பிராணி எது?
1. எறும்பு 2. சிலந்தி 3. நண்டு 4. எலி

28) இயற்கையான நிலையில் பயன்படுத்தப்படுகின்ற சங்கீதக் கருவி பின்வருவனவற்றுள் எது?
1. புல்லாங்குழல் 2. தம்புரா 3. கொம்பு 4. சங்கு

29) பச்சையரிசி, சர்க்கரை, பயறு, கடலை போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும் விசேட உணவு எது?
1. பாற்சோறு 2. பயற்றம் உருண்டை 3.பொங்கல் 4. லட்டு

30) தாளின் பின்புறத்தே "வடிக பட்டுண" எனும் கரைநாட்டு நடனக் கலைஞரின் உருவம் இடம்பெற்றுள்ள காசுத்தாளின் பெறுமதி யாது?
1. 20 ரூபா 2. 50 ரூபா 3.1000 ரூபா 4. 5000 ரூபா

31) சிறுவர்களைத் துன்புறுத்துவது தொடர்பாக அறியக கொடுப்பதற்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் யாது?
1. 1919 2. 119 3. 118 4. 1929

32) நுளம்பு பெருகிய இடத்தில் வசிக்கும் ஒருவர் நுளம்புக் கடியிலிருந்து தப்புவதற்காக உடலில் பூசிக்கொள்ள உதவும் எண்ணெய் எது?
1. வேப்பெண்ணெய் 2. இலுப்பெண்ணெய்
3. நல்லெண்ணெய் 4. சித்திரனெல்லா எண்ணெய்

33) இல்ல விளையாட்டுப் போட்டியின்போது விஜயபாகு, புவனேகபாகு, கஜபாகு ஆகிய இல்லங்களின் மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் வெற்றிபெற்று பதக்கங்களைச் சுவீகரித்துக் கொண்டவர்களின் விபரங்கள் பின்வருமாறு.

| | பதக்கங்கள் பெற்ற ஆண் பிள்ளைகள் | | | பதக்கங்கள் பெற்ற பெண் பிள்ளைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| இல்லங்கள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| விஜயபாகு | 20 | 17 | 18 | 20 | 13 | 17 |
| புவனேகபாகு | 21 | 18 | 19 | 15 | 22 | 15 |
| கஜபாகு | 14 | 20 | 18 | 15 | 15 | 18 |

1. கஜபாகு இல்ல மாணவர்கள் அனைவரும் பெற்ற பதக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது? (.........................)


2. புவனேகபாகு இல்ல ஆண்பிள்ளைகள் பெற்ற பதக்கங்களும் பெண் பிள்ளைகள் பெற்ற பதக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு? (.........................)

3. மொத்தமாக எத்தனை தங்கப் பதக்கங்கள வழங்கப்பட்டுள்ளன? (.........................)

4. தங்கப பதக்கங்கள் பெறறிருக்கும் வகையில் எந்த இல்லம் முதலாம் இடத்தில் இருக்கிறது? (.........................)

5. தங்கப் பதக்கம் ஒன்றிற்கு 5 புள்ளிகள், வெள்ளிப் பதக்கம் ஒன்றிற்கு 3 புள்ளிகள், வெண்கலப் பதக்கம் ஒன்றிற்கு 1 புள்ளி என்ற ரீதியில் புள்ளிகள் வழங்கப்படுமாயின் கஜபாகு இல்ல பெண் பிள்ளைகள் பெற்றிருக்கும் புள்ளிகள் எத்தனை? (.........................)

6. விஜயபாகு இல்லம் பெற்ற பதக்கங்களின் மொத்த எண்ணிக்கையை அருகிலுள்ள வரைபில் நிழற்றிக் காட்டுக?





34. அட்டவணையில் வெற்றிடங்களைச் சரியாக நிரப்புக.

| வாகன வகை | வாகனங்களின் எண்ணிக்கை | சில்லுகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | ...................... | 50 |
| முச்சக்கர வண்டி | ...................... | .............. |
| கார் | ...................... | 32 |
| மொத்தம் | 45 | 118 |


35. பின்வரும் கருவிகளைப் பெயரிடுக.


1. 
......................


2. 
......................


3. 
......................

36. உருவில் காட்டப்பட்டுள்ள பொருட்களின் நிறையானது கிலோக்கிராமில் அளக்கப்படுகிறது. இங்கு தரப்பட்டுள்ள அளவுகளின் படி 3 வது உள்ள பொருளின் நிறையை எழுதுக.


3.7



6.9


......................

37. 



அருகிலுள்ளவாறு 77 செ.மீ நீளமும் 25 செ.மீ அகலமும் கொண்ட 4 பலகைத்துண்டுகளைப் பயன் படுத்தி தயாரிக்கப்பட்ட கதவொன்று உருவிலுள்ளவாறு உள்ளது. இக்கதவின்,
1) உயரம் எவ்வளவு? ...................
2) அகலம் எவ்வளவு? ...................

38. பின்வரும் உருவில் நிழற்றப்படாத பகுதிகளை முழு உருவின் பின்னமாக எழுதுக.




.............................

39. 424 மாம்பழங்கள் 4 கூடைகளில் சமமாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? (.....................)

40. 

காட்டப்பட்டுள்ள தளவடிவங்களைப் பயன்படுத்தி அமைக்கக் கூடிய திண்மப் பொருளின் பெயரை எழுதுக.
..................................

41. பின்வரும் உருவிலுள்ள ஒவ்வொரு சதுரத்தின் நீளமும் அகலமும் 1 சென்ரி மீற்றராகும்.



இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியின்
1. சுற்றளவு யாது? ..............
2. பரப்பளவு யாது? ..............

42. பின்வரும் தகவல்களுக்கேற்ப ஆங்கில எழுத்துக்களாலான அடையாளக் குறியீடுகளை கட்டமிட்டுத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

SLRC
ISO
SLS
CTB
CEB

1. தரமான பொருட்கள் ...........
2. இலங்கை மின்சார சபை ...........
3. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ...........
4. தர நிர்ணயச் சான்றிதழ் ...........
5. இலங்கைப் போக்குவரத்துச் சபை ...........


43. அந்தச் செய்தி காட்டுத்தீ போல ஊரெங்கும் பரவியது. டெங்கு நோயினால் பீடிக்கபபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த முருகேசன் இறந்து விட்டானாம்.

இறந்துபோன முருகேசன் உமது நெருங்கிய நண்பன் எனக் கருதிக் கொண்டு, அச்சமயத்தில் உமது செயற்பாடுகள் தொடர்பாக ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம்பெறுவதுடன், எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் சரியாக அமைந்திருத்தல் வேண்டும்)

1. ..............................................................................
..............................................................................
2. ..............................................................................
..............................................................................
3. ..............................................................................
..............................................................................
4. ..............................................................................
..............................................................................
5. ..............................................................................
..............................................................................
6. ..............................................................................
..............................................................................

(விடைகள் 18ம் பக்கம் பார்க்க...)

# அன்னா ஹசாரே உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து அதிகமக்கள் பங்கேற்பு



வலுவான லோக்பால் சட்டத்தை வலியுறுத்தி கடந்த செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதம் இருக்க முயன்ற பிரபல காந்தியவாதி அன்னாஹசாரே கைது செய்யப்பட்டார். டில்லி திகார் சிறையில் அவர் அடைக்கப்பட்டதால் நாடெங்கும் எழுச்சி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அன்னாஹசாரே உண்ணா விரதம் இருக்க பொலிஸார் அனுமதி கொடுத்தனர்.

உண்ணாவிரதத்துக்கு டில்லி பொலிஸார் சில நிபந்தனைகளை விதித்தனர். எந்த நிபந்தனையையும் ஏற்க மாட்டேன் என்று கூறிய அன்னாஹசாரே சிறையில் உண்ணா விரதம் இருக்க தொடங்கினார்.

பொலிஸார் விடுதலை செய்து விட்டதாக கூறிய பின்னர் அன்னாஹசாரே தனது முடிவில் பிடிவாதமாக இருந்ததால் டில்லி பொலிஸார் தங்களது எல்லா நிபந்தனைகளையும் விலக்கி கொண்டனர். அதன் பின்னர் அன்னா ஹசாரே 15 நாட்கள் மட்டும் உண்ணாவிரதம் இருக்க சம்மதித்தார்.

டில்லி திகார் சிறையில் இருந்து வெளியேறியதும் நேரடியாக உண்ணாவிரதம் இருக்கும் இடத்துக்குத்தான் செல்வேன் என்று அன்னா ஹசாரே உறுதிபட கூறி இருந்தார். இதனால் அவர் 3 ஆவது நாளாக நேற்றுமுன்தினம் இரவு திகார் சிறைக்குள்ளேயே இருந்தார். திகார் சிறைவாசலில் அன்னா ஹசாரேக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. அவரை வரவேற்பதற்காக சிறை வாசலில் ஆயிரக் கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். நேற்று அதிகாலையில் இருந்தே டில்லியின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானவர்கள் வந்திருந்தனர்.

அன்னாஹசாரே சிறையை விட்டு வெளியில் வரும்போது அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதற்காக 300 பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

பொது மக்கள் வரவேற்பை ஏறுக் கொண்டு நன்றி தெரிவித்த அன்னாஹசாரே பின்னர் மகாத்மா காந்தி சமாதி அமைந்துள்ள ராஜ்காட்டுக்கு சென்று மலர்தூவி மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினார்.

அதன் பின்னர் உண்ணாவிரதம் இருக்க ராம்லீலா மைதானத்துக்கு வந்தார். அங்கு பல்லாயிரக்கணக்கானவர்களுடன் அவர் உண்ணாவிரதத்தை தொடங்கினார். ராம்லீலா மைதானத்துக்கு மக்கள் திரண்டு வந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் தேசப் பக்திப் பாடல்களை பாடியபடி உள்ளனர். ராம்லீலா மைதானமே மக்களின் கோஷத்தால் உணர்ச்சி பெருக்கான கோலமாக உள்ளது.

அன்னாஹசாரே உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாடெங்கும் மக்கள் உண்ணாவிரதத்தில் பங்கேற்றுள்ளனர். சில இடங்களி-ல் லோக்பால் சட்டத்தை வலியுறுத்தி யாகங்கள் நடத்தப்படுகின்றன. (4-2)

## நிவாரணப் பணியில் ஐ.நா.பணியாளர்கள்

மனிதாபிமான நோக்கங்களுக்காகவும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட சிரியாவின் நிலவரங்கள் குறித்து ஆராய்வதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களை சிரியாவுக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்தல் போன்றவற்றுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள் செல்லவுள்ளனர்.(4-2)

# சிரியாவில் உள்ள ஊழியர்களை திருப்பியழைக்கிறது ஐ.நா.சபை

சிரியாவில் பொதுமக்கள் மீது இராணுவம் நடத்திவரும் தாக்குதல் காரணமாக மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அந்நாட்டிலுள்ள ஊழியர்கள் 26 பேரை தற்காலிகமாக திரும்பப் பெறுவதாக ஐ.நா. அறிவித்துள்ளது. இதற்கிடையே அப்பாவி மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளதாக சிரிய ஜனாதிபதி அசாத் கூறியுள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் அடக்குமுறையை எதிர்த்து பலதரப்பு மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசின் எதிர்ப்பாளர்களை அடக்கும் பொருட்டு நாட்டின் பல்வேறு இடங்களில் அந்நாட்டு அரசு இராணுவ தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இதுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரிய அரசின் அடக்குமுறைக்கு பல்வேறு உலக நாடுகளும் கண்டனம் தெரிவித்தாலும் ஜனாதிபதி அசாத் இராணுவ தாக்குதலை நிறுத்த தயாராக இல்லை. இதையடுத்து அந்நாட்டில் தங்கி அமைதி மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ள தங்கள் அமைப்பின் ஊழியர்கள் 26 பேர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை திரும்பப் பெறுவதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

இவர்களை லெபனான் நாட்டில் மறுகுடியமர்த்தும் பணிகளை மேற்கொண்டுள்ளதாவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் சிரிய ஜனாதிபதி அசாத்தை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது சிரியாவின் நிலவரம் கவலை தருகிறது என்றும் உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனவும் பான் கீ மூன் வலியுறுத்தினார். அவரின் குற்றச்சாட்டை மறுத்த அசாத் சிரியாவில் இராணுவம் மற்றும் பொலிஸ் நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கிடையே சிரிய நிலவரம் குறித்து ஆலோசனை மேற்கொள்வதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று கூடியது. இந்தக் கூட்டத்தில் சிரிய மக்களின் நிலை, அசாத் அரசின் அடக்குமுறைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளை விவாதித்தார்.

அப்போது போராட்டக்காரர்கள் மீது சிரிய இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைக்கு அவர் பரிந்துரைப்பார் என்று கூறப்படுகிறது. (4-2)

## ஜப்பான் நாட்டில் சுனாமி எச்சரிக்கை கைவிடப்பட்டது

ஜப்பானின் வட கிழக்கில் 6.8 ரிக்டர் அளவிலான கடும் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சுனாமி அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜப்பான் நேரப்படி நேற்று மாலை 2.36 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. தென் கிழக்கில் உள்ள சுன்டாய் என்ற நகரில் இந்த நிலநடுக்கத்தின் மையம் இருந்தது. இந்த நகரம் மியாகி மாகாணத்தின் தலைநகரமாகும்.

கடலுக்கு கீழ் 20 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதியன்று ஏற்பட்ட 9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிக்கு அருகே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கம் காரணமாக 0.5 மீற்றர் உயரத்திலான அலைகள் கடற்கரைப் பகுதியைத் தாக்கக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது இந்த சுனாமி எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளது. (4-2)


# UNIVERSITY OF JAFFNA
# BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following service.

| Service Detail | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum Grade |
|---|---|---|---|
| Gardening work at the Main Campus, Thirunelvely, University of Jaffna | 7,500.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar Gardening work |
| Gardening work at Faculty of Medicine, Thirunelvely, University of Jaffna. | 5,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar Gardening work |

Bid forms may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 02.09.2011.

Perfected Bid should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.30 p.m on 14.09.2011 and open immediately thereafter.

· Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid form may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
19.08.2011

Registrar
University of Jaffna.

(c-4089)

## சீன வர்த்தகக்கண்காட்சி பார்க்க விரும்புவோருக்கு

(யாழ்ப்பாணம்)

வருடந்தோறும் மிகப்பிரமாண்டமான முறையில் சீனாவில் நடைபெற்றுவரும் கைத்தொழில் வர்த்தக கண்காட்சி சீனாவின் கன்ரன் மாநகரில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ளது.

இலங்கையிலிருந்தும் பல்வேறு தொழில் முயற்சியாளர்கள் மேற்படி கண்காட்சிக்கு செல்வது வழக்கமாகும். 1957 ஆம் ஆண்டு முதல் சீன நாட்டில் நடைபெற்றுவரும் இக் கண்காட்சி 110 ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

எனவே மேற்படி வர்த்தக கைத்தொழில் கண்காட்சியினை பார்வையிட ஆர்வமுள்ளோர் இல.175, பருத்தித்துறை வீதி, ஆணைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்ற நிறைவேற்று அதிகாரி அறிவித்துள்ளார். (4)

## குத்துச்சண்டை வீரருக்கு கையில் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சியில் இடம்பெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் எதிர் வீரர் தாக்கியதில் கைமுறிந்த நிலையில் குத்துச் சண்டை வீரர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கடந்த வருடம் தேசிய மட்டத்தில் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொண்ட பருத்தித்துறையை சேர்ந்த செல்வரட்ணம்- ஜெனிந்ராஜ் (வயது-32) என்ற வீரரே காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இன்பசிட்டி காண்டீபன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற குத்துச் சண்டை போட்டியின் போதே இடம்பெற்றுள்ளது. (4-24)




## உணவத்து கண்ணகை அம்மனுக்கு இராணுவத்தால் 40 அடி நீளமான கொட்டகை அமைக்கப்பட்டது

(பொற்பதி)

கடந்த மாதம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வெற்றிலைக்கேணி ஜே/432 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்த உணவத்து கண்ணகி அம்மன் ஆலயத்தின் பாலஸ்தான நிகழ்வுகள் நடைபெற்றது.

இதனால் ஆலயத்தின் விக்கிரகங்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில் வைக்கப்பட்டுள்ளன.

எனவே இவ் ஆலயத்தின் வழிபாட்டை விருத்தி செய்யும் நோக்குடன் இப்பகுதி இராணுவத்தினரால் 40 அடி நீளமான கொட்டகை ஒன்று அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகிறது. (4-2-64)

## வவுனியா தெற்கு அணியுடன் மோதி வல்வெட்டிக்கழுகு அணி வெற்றிபெற்றது

(கரவெட்டி)

வவுனியா தெரிவு அணியை 16 ஓட்டங்களால் வல்வெட்டிக்கழுகு அணி வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா தெரிவு அணிக்கும் வல்வெட்டி கழுகு அணிக்கும் இடையில் நடைபெற்ற 20 இற்கு 20 கிரிக்கெட் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கழுகு அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகு அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களை பெற்றது.

இதில் முல்லைதிவியன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும் ஜீவகன் 29, தனஞ்சன் 24 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றனர்.

வவுனியா தெரிவு அணியின் பந்துவீச்சின் சார்பாக ரகுமான்,ராசாதீன் ஆகியோர் தலா3 விக்கெட்டுக்களையும் கலைச்செல்வன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

175 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெத்தாடிய வவுனியா தெரிவு அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்த 158 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ரிசாத் 66 ஓட்டங்களையும் பவுதீன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சின் சார்பில் ஜீவகன் 4 விக்கெட்டுக்களையும் கோகுலன், துளசி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (4-24)



தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் பிரிவு 4 இலக்கணப் போட்டியில் வட இந்து மகளிர்கல்லூரி மாணவி கணேசமூர்த்தி சீதாஞ்சனா 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

## வீதியைப் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி மடத்தடி தம்பசிட்டி வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமையால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதி கடந்த 10 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

அத்துடன் இவ்வீதி வடமராட்சி போக்குவரத்திற்கும் பிரதான வீதி என்பதால் தினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் பயணித்து வருவதுடன் பல நூற்றுக்கணக்கான வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்துத்தரும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-24)

## ஏழாலை துர்க்காதேவி ஆலயத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுகள்

ஏழாலை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொதுக்கூட்டமும் நடப்பாண்டுக்கான நிர்வாக சபை தெரிவும் கடந்த 14 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு சபைத் தலைவர் ஜெ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நடப்பாண்டின் புதிய தலைவராக கா.கஜன், உப தலைவராக கருணாநிதி, செயலாளராக அ.ரமணன், உப செயலாளராக எஸ்.மயூரன், பொருளாளராக தி.ஐங்கரன் ஆகியோருடன் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் நா.நவரட்ணராஜா, கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராஜா, கிரிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-29)

## நாவலடி-ஓராங்கட்டை வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

பருத்தித்துறை நாவலடி ஓராங்கட்டை பிரதான வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி கடந்த பத்து வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

அத்துடன் இவ்வீதி வடமராட்சிப் பகுதியின் பிரதான வீதி என்பதால் தினமும் பல ஆயிரக்கணக்காக மக்கள் பயணித்து வருவதுடன் பருத்தித்துறையிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் போக்குவரத்து செய்யும் வீதியாகவும் காணப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்துத் தரும்படி மக்கள் கேட்ளளடுக் கொள் கின்றனர். (4-24)

## விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய நாட்டிய விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் இருந்து தேசிய நாட்டிய விழாவிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து கொள்ள முடியுமெனவும் இதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை எனவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (4-2)

## விபத்தில் முதியவர் படுகாயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதிய விபத்தில் வயோதிபர் ஒருவர் தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 11.30 மணியளவில் நடுக்குடத்தனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கொற்றாவத்தையை சேர்ந்த வேலன்- சிவலிங்கம் (வயது-60) என்ற வயோதிபரே படுகாயமடைந்துள்ளார். (4-24)

## நிஸ்கோ நிறுவனத்தினால் சுய தொழில் கடன்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கின்ற 14 வயது தொடக்கம் 30 வயதுக்கிடையிலான இளைஞர், யுவதிகளில் சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் சுய தொழில் கடன் வழங்கப்படவுள்ளது.


இக்கடன் பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் தாமாக தயாரித்த விண்ணப்பத்தினை எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் ப.பஞ்சலிங்கம், பொது முகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவை மன்றம், மாவட்ட அலுவலகம், தேசிய வீடமைப்புக் கட்டடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிஸ்கோ பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார். (4-2)

## நல்லை ஆதீனத்தின் பீடாரோஹன விழா

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோயிலின் அருகில் அமைந்துள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 45 ஆவது ஆண்டு நிறைவில் பீடாரோஹன விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 7 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதன்பின் திருமுறைப் பாராயணம்,கொலுபூசை, அதனைத் தொடர்ந்து பீடாரோஹண விழா, பட்டணப்பிரவேசம் என்பன நடைபெறும். (4)





கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை விழா நிகழ்வுகள் நல்லை ஆதீன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் சி.பத்மராணி வர வேற்புரை நிகழ்த்துவ தையும், கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

நரி தன் கனவில் கூட, கோழிகளை எண்ணிக் கொண்டே இருக்கும். - வாலஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைப் பலம் அவசியம்

மர்ம மனிதன், கிறீஸ் மனிதன் என்ற பயங்கரத்தின் காரணமாக கிழக்கு மாகாணத்தின் நிலைமை அச்சம் தருவதாகவே அமைகின்றது.

இருந்தும் கிழக்கு மாகாண மக்கள் எந்த வித பின்னணியும் இல்லாமல் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் அளவில் அவர்களின் தற்துணிவு பாராட்டுதற்குரியது.

மர்ம மனிதன் என்ற விவகாரம் யாழ்ப்பாணத்தில் இருந்திருக்குமாயின், கிழக்கு மாகாணம் போல, ஒரு பெரும் சனக்கூட்டம் திரளுமா? என்பது கேள்விக்குறியே.

அந்த வகையில், கிழக்கு மாகாண மக்களின் ஒற்றுமை பாராட்டப்படலாம். அதேநேரம் கிறீஸ் மனிதன் என்ற விடயம், சிங்கள மக்களுக்கு பிரச்சினைபோல் தெரியவில்லை.

கிறீஸ் மனிதன் என்ற விவகாரம் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு பயங்கரமாக இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

கிறீஸ் மனிதன் என்ற பிரச்சினை தொடர்பில் பொலிஸார் எடுக்கின்ற நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லையென்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியில் கிறீஸ் மனிதனின் பின்னணியில் பலமானவர்கள் இருப்பதான குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் இல்லை.

இலங்கை அரசியலை பொறுத்தவரை சிறுபான்மையின மக்களை, ஆளும் வர்க்கமாக கருதும் நிலைமை சடுதியாக ஏற்படும் என்று கூறமுடியாது.

அத்தகைய ஒரு சூழமைவை ஏற்படுத்த வேண்டுமாயின் தமிழ்-முஸ்லிம் மக்களே அதற்கான களநிலைமையை உருவாக்க வேண்டும்.

அந்த உருவாக்கம் தமிழ்-முஸ்லிம் மக்களின் இறுக்கமான ஒற்றுமை மூலமே சாத்தியமாகும்.

கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது, இலங்கையின் ஆட்சியாளர்களால் சிறுபான்மை இன மக்கள் பிரித்தாளப்பட்டு வந்துள்ளதை பல இடங்களில் காணலாம்.

இப்போது கூட, அத்தகைய தன்மை குறைந்து விடவில்லை. ஆக என்று தமிழ்-முஸ்லிம் மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் ஒற்றுமைப்பட்டு ஒன்று சேர்ந்து, சிறுபான்மை இனங்களின் விடிவுக்காக வியூகம் அமைக்கிறார்களோ அன்றுதான் சிறுபான்மையின ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டப்படும்.

இதற்கான ஒரு சந்தர்ப்பமாக கிறீஸ் மனித விவகாரம் அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி தமிழ்- முஸ்லிம் மக்கள் தங்கள் சகோதர உறவை பலப்படுத்தி உரிமை விடயத்தில் வெற்றிகொள்ள வேண்டும். இது காலத்தின் அவசர தேவையாக உள்ளது.

# கருணைக் கருணகிரி என போற்றப்படும் அருணகிரிநாதர்

‘அருணகிரி’ எனப் பெயர் பெற்ற திருவண்ணாமலை நடுநாட்டில் உள்ளதொரு சிவக்ஷேத்திரம். அது பஞ்ச பூத ஸ்தலங்களுள் தேயு ஸ்தலம்; ‘ஸ்மரணாத் அருணாசலே’ என்றபடி நினைத்த மாத்திரையில் முக்தியளிக்க வல்லது.

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியும் அண்ணாதற்(எட்டாதவாறு சிவபெருமான் ஜோதி மலை வடிவமாய் உயர்ந்து நின்றருளிய தலம். இத்தகைய திவ்ய க்ஷேத்திரத்தில் ‘அடியார் செய்த தவப் பயனால்’ அருணகிரிப் பெருந்தகையார் அவதாரம் செய்தருளினார்.

இவர் திருமூலர், திருவள்ளுவர், நக்கீரர், திருஞானசம்பந்தர் முதலான நால்வர் முதலியோரின் நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர் என்பதும் புராணம், இதிகாசம் முதலியவற்றையும்நன்கு வல்லமை பெற்றவரென்பதும் இவரது நூல்களிலிருந்து தெரிய வருகின்றன.

இவர் இளமையில் மாதர் வலையில் வீழ்ந்து உழன்று நோயுற்று வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டவராய்த் தம் உயிரைப் போக்கிவிட திருவரணைக் கோயில் வல்லாள கோபுரத்தின் உச்சியில் ஏறிக் குதித்து உயிரை மாய்ந்துக் கொள்ள விழுந்த போது முருகவேள் இளநகை முகத்தராய் மயில் மேல் வந்து, காட்சி கொடுத்து, இவரைக் காப்பாற்றி தடுத்தாட் கொண்டார்.

மேலும் இவரை ‘அருணகிரிநாதா’ எனப் பெயரிட்டழைத்து திருமூல நாதர் போல)‘நாத’னாம் பட்டத்தையும் அளித்து ஸ்பரிசத்தினால் அவர் உடல் நோய் ஆகியவற்றைப் போக்கி கடைக்கண்ணால் தீக்ஷை செய்து திருநீறு தந்து ஜெபமாலையும் கொடுத்துத் திருவடி தீக்ஷையும் செய்து மௌனோபதேசம் ஈந்து ‘எம் மீது திருப்புகழ் பாடுக’ என்று மொழிந்தருளினார்.

பெரிய முருகபக்தராகிவிட்ட அருணகிரியார், தென் திசைத் தலங்களையெல்லாம் தரிசித்துச் சந்தத் திருப்புகழைப் பாடிக் கொண்டே வருகையில் திருச்சிராப்பள்ளிக்கடுத்த வயலூரை வந்தடைந்தார். வயலூர்ப் பொய்யாக் கணபதியார் அவருக்கு மயில் கடப்பமலர், வேல், சேவல், முருகபிரானுடைய இரு சீறடி, அவரது பன்னிரு தோள்கள், வயலூர்- இவை அனைத்தையும் வைத்துத் திருப்புகழ் பாடுக என அனுக்கிரகம் செய்தார்.

தொங்கலொடு கூடிய விசேட சந்தப் பாவகைக்கு ஆதிகர்த்தா இவரே. ஒரு சப்த பரிமாண அழகும் மந்திரத்தைப் போன்ற மகத்துவமும் நெருப்பையும் எரிக்கும் வல்லமையும் பெற்ற இருப்பவல் திருப்புகழைப் படிப்பவர்க்கும் பாடுபவர்க்கும் கேட்பவர்க்கும் தான் இதன் பெருமை தெரியவரும். ஒரு தாளநூல் என்றே இதைச்சொல்லி விடலாம். இவ்வற்புதப்பாக்களில் 1320- தாம் இதுவரை கிடைத்துள. நாற்றிசையிலும் நாதன் புகழைப் பரப்பிவரு நாளில் திருச்செந்தூர்க்கருகில் அருணகிரிநாதரோடு அவரது சமகாலப் புலவரான வில்லி புத்தூரர் வாது செய்ய வந்தார். அவர் கையில் தம்மிடம் வாதில் தோற்றவர்களுடைய காதைக் கொய்யும் கருவி (குறடு) ஒன்றுண்டு. அருணகிரியார் ஆண்டவன். அருள் துணைசெய்யுமாயின் அச்சம் ஏன் என்று திடங் கொண்டு தாம் ஒரு யமக அந்தாதி பாடுவதாகவும் அதற்கு வில்லிபுத்தூரர் உரை சொல்லிவர வேண்டுமென்றும் கூறிக் கந்தரந்தாதி என்ற நூலைப் பாடியருளினார். அதில் திதத்தத்தத் எனத் தொடங்கும் 54ஆவது செய்யுளைப் பாடவும் அப்பாடற்கு உரை கூற இயலாது வில்லிபுத்தூரர் திகைத்து விழிக்கவும் நம் அருணகிரிநாதசுவாமிகளே அப்பாட்டிற்கு உரை கூறி முடித்தனர். வாதில் தோற்றவரது காது கொய்யப்பட வேண்டும்எனும்ஏற்பாட்டின்படி உடனே வில்லிபுத்தூரர் குறடாவை அவரிடம் கொடுத்துத் தம் காதைக் கொய்யச் சொல்லவும் கருணைக் கருணகிரி என்று போற்றப்படும் நம்சுவாமிகள் அன்று முதல் வேறு புலவர் எவர் காதையும் கொய்யாதிருக்கும் படி அவருக்குக் கட்டளையிட்டுக் குறடாவைப் பறித்தெறிந்துவிட்டு அவர் காதையும் கொய்யாது விடுத்தருளினார். சுவாமியிடம் தோற்ற சம்பந்தாண்டன் மீண்டும்அவர்பாற்பொறாமை கொண்டு அவரைக் கற்பக லோகப் பாரிஜாதப் பூவைக் பூவுலகுக்கு கொணருமாறு கட்டளையிடும்படி அரசனிடம் வேண்டினான். அவன் சூழ்ச்சியால் அவ்வாறே அரசனும்கேட்டுக்கொள்ள நம் சுவாமி களும் திருவருணைக் கோபுரத்தில் ஒரு புறத்தே தம் உடலைச் சேமித்துவைத்து விட்டு இறந்து கிடந்த ஒரு கிளியின் உடலில் பரகாயப் பிரவேசம் என்னும் சித்தியால் புகுந்து வானுலகு சென்று பாரிஜாதப் பூவைப் பறித்துக் கொண்டு வந்து பூவுலகை யடைந்தார். அதற்குள் பொறாமையாளனும் சம்பந்தாண்டன் அவரது தேகத்தைத் தேடிக் கண்டுபிடித்து அவர் இறந்து விட்டார் என அரசனிடம் சொல்லி அவ்வுடலை எரித்து விடும்படி செய்தான். சுவாமிகளும் தம் உடலை வைத்த இடத்திற்காணாதவராய் அதுபற்றிச் சிறிதும் வருந்தாமல் உடற்சிறையிராமல் விடுவித்தருள் நியாயக்காரன் என ஆண்டவனைத் துதித்து அதேகிளி ரூபத்தில் தணிகையாண்டவன் திருக்கையில் அமர்ந்து கந்தரநுபூதி, திருவகுப்பு இவை இரண்டையும் பாடியருளினார் என்றும் கிளி உருவில் இன்னும் பார்வதிதேவி யின் கையில் வீற்றிருக்கின்றாரென்றும் பலபடக்கூறுவர்.

**நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கு வீதியில் அருணகிரிநாதர் இன்று எழுந்தருளுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

# யுத்தம் முடிபடைந்த போதும் முழுமையான பாதுகாப்பு இல்லை

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிபடைந்து புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்ற போதிலும் நாட்டின் பாதுகாப்பினை பூச்சிய நிலைக்கு கொண்டுசெல்ல முடியாது என ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைமுடிவுகளைஅறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக் களத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரஷ்யாவிலிருந்த இலங்கை 14 ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்திருக்கின்றது புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளநிலையில் இது அவசியம்தானா? இதற்காக அரசாங்கம் எவ்வளவுபணத்தை செலவுசெய்துள்ளது? என செய்தியாளர் ஒருவர் கேட்ட போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

எத்தனை ஹெலிகொப்டர்கள் வாங்கப்பட்டது. எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்பது பற்றிய விபரங்களைஉடனடியாகதெரிவிக்கமுடியவில்லை.

எனினும் யுத்தம் முடிபடைந்து விட்டது என்பதற்காக முழுமையான பாதுகாப்பில் இருக்கின்றோம் என எண்ணி விட முடியாது. இப்போது புதிதாக கரையோரபாதுகாப்பு பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காகவும் ஹெலிகொப்டர்கள் தேவைப்படும். கரையோரப் பாதுகாப்பு மிகவும் அவசியமானது. கடந்த காலங்களில் கடல் மார்க்கமாகவே புலிகளுக்கு ஆயுதங்கள் வெடிபொருட்கள் வந்தன.

கரையோரத்தை பாதுகாப்பது மிகவும் அவசியமானது. இவ்வாறான நடவடிக்கைகளுக்காகவே இவை தருவித்திருக்கலாம் என நான் எண்ணுகின்றேன் என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார். (4-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## ஆசிமொழிகள்



இறைவனைப் பிரார்த்தனை செய்வதை வழக்கமாக்குங்கள். வழிபாட்டினால் நம்முடைய நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன.

தன்னுணர்வுடன் பிரார்த்தனை செய்தால், நம்முடைய விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.

பிறருடைய நன்மைக்காக பாடுபடுவதே தவம். கர்மயோகி என்பவன் தாம் செய்யும் பணிகள் அனைத்தையுமே தவமாகச் செய்வான். தவம் செய்யச் செய்ய மனத்தூய்மை உண்டாகும். மனத்தூய்மை அடைந்தவன் இறைக்காட்சி பெறுவான். மதம் என்பது அதன் கோட்பாடுகளில் இல்லை. மதத்தின் சாரம் அதன் செயன்முறையில் தான் இருக்கிறது.

நன்மை செய்வது நல்லவனாக வாழ்வது. இதுதான் மதத்தின் முழுப்பரிமாணம். இலட்சிய மனிதனின் நோக்கம் சமுதாயத்திற்கு உதவுவதாகவும் மறு உலகிற்கு வழிகாட்டுவதாகவும் அதே சமயத்தில் மரணத்தைக் கண்டு கலங்காத ஆயத்த நிலையிலும் இருக்கும்.

சோம்பலோ, பொறாமையோ ஆணவமோ தீயகுணம் என்பது எது இருந்தாலும் அதைத் தூர எறிந்து விட்டு ஆர்வத்துடன் செயற்களத்தில் வலிமையோடு நின்று பணியாற்றுங்கள்.

# 07, 14ஆம் பக்கங்களில் வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைகள்

பகுதி-II

1)1. நன்மை செய்து வாழ்தல்/உண்மை வழிநடத்தல்/பண்பில் குன்றாய் விளங்குதல் அறிவை நாளும் வளர்த்தல் (2 புள்ளிகள்)
2. பலரிடமிருந்தும நற்பெயரைப்பெறலாம்/உதவிகள் பெறலாம் (1புள்ளி)
(1புள்ளி)
3. உண்மை (1புள்ளி)
4. குன்று (1புள்ளி)
5. அறிவை வளர்க்க வேண்டும்
(மொத்தம்-6 புள்ளிகள்)

2) 1. கேட்ட உதவியை மறுத்தல்/இல்லையென்று சொல்லுதல்
2. பாராட்டுதல்/உற்சாகப்படுத்தல்
3. எதற்கும் பயனற்றவன் (3 புள்ளிகள்)

3) 1.எருது/எக்காளமிடும்
2.குறுகுறுக்கும்/மயில்
3. வண்டு/ரீங்கார் இடும் (6புள்ளிகள்)

4) 1. தண்டவாளத்திலிருந்து
2. குளிர்பான
3. அளப்பரிய (3புள்ளிகள்)

5) 1. நான் உள்ளே வரலாமா?/வரட்டுமா?
2. உங்கள் ககைளைத் தட்டுங்கள்
(2புள்ளிகள்)

6) 1.I am a grass hopper
2.I have six legs (2புள்ளிகள்)

7) 1. ஒயாகே நம மொனவத/மொகத?
2. தாத்தா ஆவதா? (2புள்ளிகள்)

8) 1.நாங்கள் நூலகத்துக்கு/வாசிகசாலைக்கு/நூல் நிலையத்துக்குப் போவோமா?
2. உங்கள் வயது எத்தனை? (2புள்ளிகள்)

9)3 10)2 11)2 12)2 13)1 14)4 15)3 16)3 17)4 18)2 19)2 20)1 21)1 22)4 23)2 24)2 25)1 26)3 27)2 28)4 29)3 30)2 31)4 32)4
(9-32 வரை-1 புள்ளிவீதம் 24 புள்ளிகள்)

33) 1. 100 2. 6 3. 105 4.விஜயபாகு 5. 138 ( 10புள்ளிகள்)
6. வரைபு-விஜயபாகு தங்கம் 40, வெள்ளி 20, வெண்கலம் 25,
(3புள்ளிகள்)

34) மோட்டார்வண்டி 25
முச்சக்கர வண்டி 12
சில்லுகள் 36, கார் 08 (5புள்ளிகள்)

35) 1. இடுக்கி/தணலிடுக்கி
2. மணியாக, 3. புரிச்சாவி (3புள்ளிகள்)

36) 4.2 கிலோகிராம்

37) 1. 200 செ.மீ 2. 150 செ.மீ

38) 6/8 / 3/4 39) 106 40)கூம்பகம்/பிரமிட் 41) 1. 18 செ.மீ 2. 8. செ.மீ$^2$
(36-41வரை 2 புள்ளிகள் வீதம் 12 புள்ளிகள்)

42)1.ISO 2.CEB 3.SLRC 4.SLS 5.CTB (5புள்ளிகள்)

43) கட்டுரை (12புள்ளிகள்)

## அரசமொழிகள் ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

அரச மொழிகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் இந்த நியமனம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அரச மொழிகள் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சு குறிப் பிடுகிறது.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு ஜனாதிபதி ஆலோசகர் சுனிமல் பெர்னாண் டோ, சிரேஷ்ட சட்டத்தரணி நீல் டயஸ், முன் னாள் உபவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, பொறியியலாளர் திஸ்ஸ டி சில்வா மற்றும் எம்.ஐ.எம்.மொஹிதீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச கரும மொழிகள் கொள்கை உரிய முறையில் செயற்படுகின்றதா என்பது குறி த்து ஆராய்வதற்கான பொறுப்பு அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள் ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய அரச கரும மொழிகள் கொள் கை மீறப்படுகின்றமை தொடர்பில் ஆராய் ந்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரமும் அரச மொழிகள் ஆணைக்குழுவுக்கு வழங் கப்படுகிறது.

இதனைத்தவிர மொழிகளைப் பயன்படுத் துவதில் நிலவும் பிரச்சினைகள், அரச நிறுவ னங்களுக்கான இரு மொழிக் கொள்கை, மக்கள் தமது தாய் மொழியில் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு உள்ள சந்தர்ப் பம் ஆகியன தொடர்பாகவும் இவ் ஆணைக் குழு கவனம் செலுத்துகிறது.

(4-2)

## அரசாங்கம் தேர்தல் காலங்களில் சட்டங்களை மீறி செயற்படுகிறது

### பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவதாக பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பு மாநகரசபையில் கடமையாற் றுவதற்காக 200 தொழிலாளர்களை இணைத் துக் கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணை யாளரிடம் முறைப்பாடு செய்யப்படும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் பாளர் ரொஹண ஹெட்டியாராட்சி தெரிவித் துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் 50 தொழிலாளர்களுக்கு ஏற்கனவே நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளதாக முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுத்துறை சேவைக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விமர்சனம் செய்ய முடி யாது எனினும் தேர்தல் இடம்பெறும் பிரதே சங்களில் இவ்வாறு ஆட்சேர்ப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளக் கூடாது என்பதே தமது நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

கொலன்னாவ மற்றும் நீர்கொழும்பு ஆகிய மாநகர சபைகளுக்கு உட்பட்ட வலயங்களில் கூடுதலான தேர்தல் வன்முறைச் சம்பவங் கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள் ளார்.

(4-2)

## கொழும்பில் தரமற்ற குளிர்களிகள் உற்பத்தி

(கொழும்பு)

கொழும்பு நகரத்தில் உற்பத்தி செய்யப் படும் குளிர்களிகளில் 40 சதவீதமானவை மனித உடலுக்கு தீங்கு விளைவிப்பவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பிரதான காரணம் குளிர்களி களைச் சேமித்து வைப்பதற்கான குளிரூட்டி களஞ்சியம் இல்லாமையே என கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குளிரூட்டி வசதிகளைக் கொண்டுள்ள பல உற்பத்தியாளர்கள் உரிய வெப்ப தட்ப நிலை யில் களஞ்சியத்தை பேணுவதில்லை என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குளிர்களிகள் நீர் தன் மையுடனோ அல்லது மாறுபட்ட நிலையிலோ இருக்கும் பட்சத்தில் நுகர்வோர் அதனை உட்கொள்வதை தவிர்த்து கொள்ளும்படி அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அண்மை காலத்தில் வெளியாகியுள்ள அறிக்கைகளின்படி திரவத்தன்மை வாய்ந்த குளிர்களிகளை உட்கொண்டவர்களுக்கு பல விதமான நோய்கள் ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரி வித்துள்ளார்.

(4-2)

## வீதிச் சட்டங்களை மீறுவோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து

(கொழும்பு)

வீதிச் சட்டங்களை மீறும் வாகன சாரதி களின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வ தற்கான திட்டமொன்றை தயாரிப்பதாக மோட் டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமைச்சு மட்டத்திலான பேச் சுவார்த்தை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பி.டி.எல்.தர்மப்பிரிய குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் திணைக்களம் மற்றும் நீதி அமைச் சுடன் இணைந்து உத் தேச திட்டத்தை செயற்படுத்துவதற்கு தீர்மா னித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (4-2)

அகவை அறுபதில்...
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
திரு.வி.சண்முகநாதமுதலி
(முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை)



கல்விச் செழுமையும் சேவை முழுமையும்
கனிந்த திருமுகப் புன்னகை எளிமையும்
வல்லவனாய் வங்கியில் வகித்த வகிபாகமும்
வண்ணமாய்க் கண்டோம்; பேரன்பு கொண்டோம்
கல்லில் எழுத்தான சேவை நிறைவுற்று (க்)
கண்ட மணிவிழா நாளில் நாம் மகிழ்வுற்று
எல்லா வளமும் இதமாய் வாழ்வதும்
இனிதாய்ப் பெற்றிங்கு இன்புற வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கி
வல்வெட்டித்துறைக் கிளையும்
உடுப்பிட்டி சேவை நிலையமும்

முகாமையாளர்,
உத்தியோகத்தர்கள்.

(சி-4087)

# பங்களாதேஷ் அணிக்கு முதல் வெற்றி

# ரெய்லர் சதமடித்தும் சிம்பாவே ஏமாற்றம்

(புலோவாயோ)

ருபேல் ஹுசைன், தமீம் இக்பாலின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுகளால் சிம்பாவே அணியை வீழ்த்தியது.

சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரே ஒரு டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி தொடர்ந்து நடைபெற்ற 3 ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் நான்காவது ஒரு நாள் போட்டி நேற்று புலாவாயோவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல்ஹசன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 48.2 ஓவர்களில் 199 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையுமிழந்தது.

இதில் அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் 137 பந்துகளில்(7 பவுண்டரிகள் 1 சிக்சர் உட்பட) 106 ஓட்டங்களையும், சிகும்புறா31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ருபேல் ஹுசைன்9 ஓவர்களில் ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட31 ஓட்டங்களைக் கொடுத்து4 விக்கெட்டுக்களையும் சபியூஸ் இஸ்லாம்2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 200 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 36.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 203 ஓட்டங்களை எடுத்து6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதன்மூலம் பங்களாதேஷ் இத்தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது. துடுப்பாட்டத்தில் தமீம் இக்பால் 53 பந்துகளில் (9பவுண்டரிகள்உட்பட) 61 ஓட்டங்களையும் அணித் தலைவர் சகீப்அல்ஹசன் ஆட்டமிழக்காமல் 39, ஹோம் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் ஹைஸ் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோபு, ஜார்விஸ், உற்சயா, பிறைஸ் தலா ஒரு விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். இப்போட்டியில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு திருப்புமுனை யமைத்த ருபேல்ஹுசைன் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# இங்கிலாந்து அணி வலுவான நிலையில்

பெல், பீற்றர்சனின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுகளையிழந்து 457 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய அணியுடனான 4 போட்டிகள் கொண்ட தொடரை இங்கிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் தனதாக்கிய நிலையில் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் லண்டன் ஓவலில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி நேற்று இரண்டா ம்நாள் ஆட்டநேர முடிவில் முதலாவது இன்னிங் சில் 457 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இயன் பெல் ஆட்டமிழக்காமல் 181, பீற்றர்சன் 175 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இலங்கை அணியில் சீகுகே பிரசன்னா அறிமுகம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மீதமுள்ள ஒருநாள் போட்டியில் விளையாட இலங்கை அணியில்அறிமுக சுழற்பந்து வீச்சாளராக சீகுகே பிரசன்னா தேர்வு செய்யப்பட் டுள்ளார்.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணி, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கிறது. மூன்று போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலிய அணி 2-1 என முன்னிலை வகிக்கிறது.

நான்காவது போட்டி இன்றும் ஐந்தாவது போட்டி நாளைமறுதினமும் கொழும்பில் நடக்கிறது. இப் போட்டிகளுக்கான 14 பேர் கொண்ட வீரர்களை, இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

**சீகுகே அறிமுகம்**

இதில் அறிமுக வீரராக சுழற்பந்து வீச்சாளர் சீகுகே பிரசன்னா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இலங்கை ஏ அணிக்காக விளையாடி வரும் இவர் கடந்த வாரம் இங்கிலாந்து ஏ அணிக்கெதிரான போட்டியில் 23 ஓட்டங்களை கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இலங்கை ஏ அணி பத்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதுவரை இவர் 56 முதல் தர போட்டிகளில் (279 விக்கெட்டுக்கள்), 48 ஏ பிரிவு போட்டி களில் (73 விக்கெட்டுக்கள்), 6 இருபது- 20 (6 விக்கெட்டுக்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார்.

**ஹெரத் நீக்கம்**

இளம் துடுப்பாட்டவீரர் தினேஷ் சண்டிமல், சுழற்பந்து வீச்சாளர் ஹெரத், சகலதுறைவீரர் திசாரா பெரேரா உள்ளிட்டோர் நீக்கப்பட்டுள்ளனர். காயம் காரணமாக மூன்றாவது போட்டியில் விளையாடாத சகலதுறைவீரர் மத்யூஸ், மீதமுள்ள போட்டிகளில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இளையோர் உலகக்கிண்ணத் தொடர் இறுதிப் போட்டியில் பிரேசில் -போர்த்துகல்




(பெரைரா)


உலகக்கிண்ண கால்பந்து (20 வயதுக் குட்பட்டோர்) தொடரின் இறுதிப் போட்டிக்கு பிரேசில்-போர்த்துகல் அணிகள் முன் னேறியுள்ளன. கொலம்பியாவில் 20 வயதுக்குட்பட்டோருக்கான பிபா உலகக்கிண்ண கால்பந்து தொடர் நடக் கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த அரை யிறுதியில் பிரேசில்- மெக்சிகோ அணிகள் மோதின.

விறுவிறுப்பான அரையிறுதியின் முதல் பாதி முடிவு, கோல் எதுவுமின்றி சமநிலை வகித்தது. பின் எழுச்சி கண்ட பிரேசில் அணிக்கு, ஹென்றிக் (80,84 ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித் கைகொடுத்தார். இதற்கு மெக்சிகோ வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**போர்த்துகல் வெற்றி**

மற்றொரு அரையிறுதியில் போர்த்துகல் - பிரான்ஸ் அணிகள் மோதின. ஆட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய போர்த்துகல் அணிக்கு, டேனிலோ (9ஆவது நிமிடம்), நெல்சன் ஆலிவிரா (40 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். இதனால் முதல் பாதி முடிவில் போர்த்துகல் அணி 2-0 என முன்னிலை வகுத்தது. இரண்டாவது பாதியில் கடைசி வரை போராடிய இரு அணி வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் போர்த்துக்கல் அணி2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இந்நிலையில் 21ம் திகதி நடக்கவுள்ள இறுதிப் போட்டியில் பிரேசில்-போர்த்துகல் அணிகள் மோதுகின்றன. மூன்றாவது இடத்துக்கான போட்டியில் அரையிறுதியில் தோல்வி கண்ட பிரான்ஸ்- மெச்சிக்கோ அணிகள் பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.













யாழ் பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளர் அருள்திரு.மரியாம்பிள்ளை எழுதிய ஆசிரியத்தலையங்கம் ஓர் அறிமுகம் நூல் வெளியீட்டு விழாவில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனிடமிருந்து முதல் பிரதியை திருமதி இமானுவேல் சவரியம்மாவும், சிறப்புப் பிரதியை லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினமும் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளவர்களை மேலுள்ள படத்திலும், ஆய்வுரை 1 ஐ கிருத்திகா தர்மராஜாவும், ஆய்வுரை 2 ஐ என்.விஜயசுந்தரமும் நிகழ்த்துவதையும் நூலாசிரியர் ஏற்புரை வழங்குவதையும் மற்றைய படங்களிலும் காணலாம்.




PC mATE SYSTEMS
Computer Sales & Repair
IBM Branded Computer
IBM Dual Core Processor
1GB DDR 2 RAM
80GB HDD
DVD R/W 18,500/= One Year Warranty
Keyboard/Mouse/HeadPhone
174/16 Temple Road, Nallur
021 222 4692 / 077 135 0476
077 9689043

# இலங்கை– அமெரிக்கா...

அவுஸ்திரேலிய விமானப்படை, மலேசிய விமானப்படை, பங்களா தேஷ் விமானப்படை ஆகியனவும் இப்பயிற்சிகளில் பங்குபற்றவுள்ளன.

பிராந்திய நாடுகளுடனான இடைத் தொடர்புகளை மேம்படுத்தவும் பிராந்திய நாடுகளின் விமானப்ப டைகளுக்கு சர்வதேச அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்கவும் உலகெங்கும் இத்தகைய பல் நாட்டுக் கூட்டுப்பயிற்சிகள் நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

இரத்மலானை, அம்பாறையிலுள்ள விமானப்படைத் தளங்களில் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. பல் வேறுவகையான பரசூட்கள் மூலம், பல்வேறு பொருட்களை விமானத்திலிருந்து தரையிறக்குதல் போன்ற பயிற்சிகளும் இடம்பெறவுள்ளன.

இராணுவ மோதல்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களின்போது மனிதாபிமான உதவிகளை வழங்குதல், இயற்கை அனர்த்தங்களை வினைத்திறனுடன் கையாள்வதற்கு ஏற்ப இந்தோ- பசுபிக் நாடுகளின் விமானப்படை ஆற்றல்களை விருத்தி செய்தல் ஆகியனவே இப் பயிற்சிகளின் பிரதான இலக்காகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அரசியல் கட்சி மூலமாகவே...

சேர்ந்த 8 மாவட்டங்களது பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அங்கு நிகழ்த்திய தலைமை உரையில் மேலும் தெரிவிக்கையில், தமிழ்க்கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்த, ஒரு இறுக்கமான கட்டுக்கோப்புடன் கூடிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னெடுத்துச் செல்ல தமிழரசுக் கட்சியின் தலைமை விரும்பவில்லை என்பதை அவர்கள் நேரடியாகவும், ஊடகங்கள் ஊடாகவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அதற்கு எவ்வித வலுவும் அற்ற உண்மையற்ற விளக்கங்களையும் கூறி வருகின்றனர். இது தமிழ் மக்களிடையே பலத்த விசனத்தையும், கவலையையும் தோற்றுவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற, உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெறுவதை மாத்திரம் இலக்காகக் கொண்ட ஒரு தேர்தல் காலக் கூட்டு அல்ல. எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு தேசிய இயக்கமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்க வேண்டும் என்பதே தமிழ்ச் சமூகத்தின் எதிர்பார்ப்பு. இது காலத்தின் தேவை. இதனை இத் தருணத்தில் உணர்ந்தாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இறுக்கமான, பலமான அமைப்பாக மாற்ற தமிழரசுக் கட்சி முன்வர வேண்டும் என இம் மாநாடு அழுத்தமாக வலியுறுத்துகிறது எனத் தெரிவித்தார். (எ-5)

# இலங்கை அரசியல்...

இலங்கை மீதான சீன மற்றும் மேற்குலக சக்திகளின் அணுகுமுறை தொடர்பான தனது மனக் குழப்பத்தை இந்தியா தவிர்க்கவேண்டும்.

இந்தியாவின் கொள்கை என்பது ஏனைய நாடுகளின் அணுகுமுறையிலிருந்து அடிப்படையில் பலவேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

இலங்கையில் நிலவும் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதில் இந்தியா தன்னை ஈடுபடுத்தி வருகிறது. இந் நிலையில் இந்தியாவானது அரசியல் தீர்வு தொடர்பான தனது முயற்சியில் தளர்வுறாது செயற்பட வேண்டும்.

ராஜபக்ஷ அரசாங்கம் மீது உண்மையான, நீதியான நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கான முழு முயற்சியையும் இந்தியா மேற்கொள்ள வேண்டும்.

மேற்கைப் போன்று ராஜபக்ஷவிற்கு எதிராக ஊடகங்களின் ஊடாக எதிர்ப்பைத் தெரிவிப்பது மட்டும் எமது அணுகுமுறையாக இருக்கக் கூடாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# இந்திய ஊடகங்களை...

தலையங்கம் ஒன்றை எழுதியிருந்தது.

இது குறித்து கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய கோத்தபாய ராஜபக்ஷ கடுமையாக விமர்சித்துள்ளார்.

தனது செவ்வி ஒன்றைப் பெறுவதற்கு இந்திய ஊடகவியலாளர் அழுத்தங்களைக் கொடுத்ததாகவும் தான் மறுத்துவிட்டதால், அந்த ஆத்திரத்திலேயே தன்னைப் பற்றி அவதூறான ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட ரீதியாக ஹிந்து ஆசிரியர் என்.ராமுக்குத் தெரிந்திருந்தபோதிலும், தன்னை இவ்வாறு விமர்சித்துள்ளது ஆச்சரியம் அளிப்பதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். ஹெட்லைன்ஸ் ருடே செய்தியாளருக்கு செவ்வியளிக்க தய்க்கத்துடனேயே ஒப்புக்கொண்டதாகவும் இதனால் தன்னிடமிருந்து தனது சகோதரரை விலகுமாறு ஹிந்து கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஊடகவியலாளர் தான் ஒரு நல்ல தொகுப்பைச் செய்து தனக்கு நற்பெயரைத் தேடித் தருவதாக உறுதிமொழி கொடுத்ததாகவும், ஆனால் கடைசியில் ஹெட்லைன்ஸ் ருடே தனது பெயரைக் கெடுத்துவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ச-5)

# பாக்.கில் குண்டு...

நூறிற்கும் மேற்பட்டோர் கூடியிருந்த போதே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் மேலும் 117 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜும்மாத் தொழுகை முடிந்த பின் இத் தாக்குதல் நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது ஒரு தற்கொலைத் தாக்குதல் என சிரேஷ்ட நிருவாக அதிகாரியான சீட் அஹ்மட் ஜான் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள இப் பிராந்தியத்தில் பழங்குடி இனத்தவர் அதிகமாக வசிக்கின்றனர். இது தலிபான் மற்றும் அல் ஹைதா அமைப்பினர் செயற்படுகின்ற பகுதியாகும். எனினும் இத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை. (ச-5)

PHYSICS CLASS
FOR ENGLISH/ Tamil Medium
- Personal and Group Classes
- Hand books Free
Contact:- T.P:- 0774287373
(5929)

# ஜனாதிபதி அடுத்த மா...

அமெரிக்க நீதிமன்றத்தின் இந்த அழைப்பாணை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகைக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும் அங்கிருந்து அது திருப்பி அனுப்பட்ட காரணத்தால் பின்னர் அது இலங்கை நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி என்ற அடிப்படையில் இராஜதந்திர பாதுகாப்பிற்கு உரித்துடையவர் என்ற போதும் புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் அவையில் வைத்து நீதிமன்ற அழைப்பாணையை மகிந்தவிடம் நேரடியாக வழங்குவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வதன் மூலம் மகிந்தவை பாரிய தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்க முனையலாம்என இலங்கைத் தூதரகம் அச்சம் தெரிவித்துள்ளது.

கடந்த முறை லண்டனில் ஏற்பட்ட அனுபவம் போன்று அமெரிக்காவிலிருந்தும் அவசரமாக நாடு திரும்பவேண்டிய அவலம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் மகிந்த ராஜபக்ஷவிற்கு எழுந்துள்ளதாகவும் அமெரிக்காவில் வைத்து நீதிமன்ற அழைப்பாணை நேரடியாக வழங்கப்படும் இடத்து அமெரிக்க ஊடகங்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து கேள்விகள் எழுப்பலாம் எனவும் அவர் தயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# தாதியர் இன்று...

ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரசிகிச்சை நிலையங்களில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களை தவிர மற்றையவர்கள் இப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

MyWay இன் பயிற்சிநெறியில் புதிதாக இணைய விரும்பும் பல்கலைக்கழக, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள், வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான முதலாவது வகுப்பு
21.08.2011 ஞாயிற்று கிழமை மதியம் 12.30 - 2.00
இவ்வகுப்பில் கலந்துகொள்வோர் அதன்பின் ஒரு மாத வாரநாள் (திங்கள்–வெள்ளி) மற்றும் 3 மாத வார இறுதி (சனி, ஞாயிறு) வகுப்புக்களில் இணைந்து பயிற்சிபெறலாம்
இவ்வகுப்புக்கான அனுமதி மற்றும் பாடநெறி புத்தகம் இலவசம்
ஆங்கிலம் கதைக்க மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சி பெற விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக பயிற்சிபெற வேண்டிய பயிற்சிநெறி
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

மணமக்கள் தேவை
யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தை சேர்ந்த பிரான்சில் குடியுரிமையுள்ள 1981-ல் பிறந்த மகம் 4-ம் பாதம் உதயத்து செவ்வாய் மணமகனுக்கு மணமகள் தேவை.
1977-ல் பிறந்த 8 செவ்வாய் கிரக பாவம் 62 1/2, உத்தரட்டாதி 2-ம் பாதம், Canada குடியுரிமையுள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. மணமக்கள் யாழ்.வந்துள்ளனர்.
பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர். வெளிநாடு 4000, உள்நாடு 2000
VANY INTERNATIONAL MARRIAGE BUREAU
Govt.Registered(International)
யாழ்.கிளை
இல.181, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
விஜய் :0771307185
வாணி :0778501013
வவுனியாக் கிளை
S.சிந்து C/o சோ.மங்கையற்கரசி
இல.102/52,சூசைப்பிள்ளையார்குளம், வவுனியா.
T.P.:0771307185
மட்டக்களப்பு கிளை T.P.:0772848495
(C-4091)
தலைமையக முகவரி
S.PONNAMPALAM
211#Liverpool Rd,
London (U.K)
கனடா கிளை
P.AKILAN
212/1 Parliament Rd
Ontarrio - Canada.
எமது இணையத்தள முகவரி:www.keethannet.com
உடனடித் தொடர்புகளுக்கு: 0771307185
தயவு செய்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரம் குறித்து வரவும்.

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரலிங்கம் இராசலக்சுமி



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், வவுனியா வைரவப்புளியங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் இராசலக்சுமி நேற்று வெள்ளிக்கிழமை (19.08.2011) யாழ்ப்பாணத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் வவுனியா நாகமுத்து அன் சன்ஸ் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் செல்லப்பா ஸ்ரோர்ஸ் வேலுப்பிள்ளை நாகேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் றூவான்வெல நாகமுத்து அமராவதியின் அன்பு மருமகளும் ஆவார். பாலகாந்தன் (செலான் வங்கி), பாலசெந்தினி(கனடா), பாலமனோகரி (அமெரிக்கா), பாலசுந்தரி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோடீஸ்வரன், மகேசன், ஜெயபாலன், இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் அட்சயன், ராகவன், யதூசன், கார்த்திக், வாசகன், வாசுகி, திவ்வியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னார் அமரர் ஆனந்தராசா, நாகலக்சுமி, யோகலக்சுமி, மங்கயற்கரசி, திலகவதி, திருநாவுக்கரசு, கதிர்காமநாதன், அமரர் நவரத்தினராசா, தேவகி, சிற்சபேசன், சந்திரவதனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அமரர் கந்தசாமி, அமரர் நடராசா, நாகம்மா, நவரத்தினம், சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (21.08.2011) காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல.05,இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P.:0212220992
கா.நா.சுந்தரலிங்கம் (கணவன்)
(5955)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.